பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்

*Volume: 47 Issue: 01 January 2026 Mohan C. Lazarus Annual Subscription: ₹ 50/- Single Copy: ₹ 5/-*



"கேளுங்கள், ...கொடுக்கப்படும்.
தேடுங்கள், ...கண்டடைவீர்கள்.
தட்டுங்கள், ...திறக்கப்படும்."

(மத்தேயு 7:7)

# உங்கள் சகோதரனிடமிருந்து...

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் **புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

இந்த **2026ம் ஆண்டு, உங்களுக்கு ஆசீர்வாதமான ஆண்டு!** நீங்கள் வேண்டிக் கொள்கிற காரியங்களில் இயேசு கிறிஸ்து அற்புதம் செய்து, உங்களை மகிழப் பண்ணுவார்!

கடந்த 2025ம் ஆண்டு முழுவதும் நமது '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்தில் கர்த்தர் மகத்தான பெரிய காரியங்களை செய்து மகிமைப்பட்டார்! கடந்த ஆண்டு கர்த்தர் இந்த ஊழியத்தில் செய்த மகத்துவமான காரியங்களை எல்லாம் இப்பத்திரிக்கையில் விவரித்திருக்கிறோம். நீங்களும் அதை வாசித்து, **கர்த்தரை துதித்து, மகிமைப்படுத்துங்கள்!**

இந்த 2026ம் ஆண்டில் கர்த்தர் நமக்கு வைத்திருக்கிற **ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்**. இந்த மாதத்தில் **நாலுமாவடியில் தீர்க்கதரிசன ஜெப முகாம்** (2026 ஜன., 14,15,16), **கோவையில் அற்புதப் பெருவிழா** (2026 ஜன., 24,25) மற்றும் **திருப்பத்தூரில் உபவாச ஜெப முகாம்** (2026 பிப்., 5,6,7) நடைபெற இருக்கிறது. இந்த ஊழியக் கூட்டங்களில் தேவ வல்லமை பலமாக வெளிப்பட **ஜெபியுங்கள்**.

இந்த 2026ம் ஆண்டில் **எழுப்புதல் அலை** சுனாமியைப்போல **தேசங்களின் மீது வரப் போகிறது!** இதுவரை கண்டிராத தேவ வல்லமை தேசங்களில் வெளிப்படப் போகிறது! திரள் திரளாக மக்கள் மனந்திரும்பி, இரட்சிக்கப்படப் போகிறார்கள்! பரிசுத்த ஆவியானவரின் இந்த எழுப்புதலின் வல்லமைக்கு முன்பாக, சாத்தானின் எந்த விதமான வல்லமையும் நிலைநிற்க முடியாது!

இது அறுவடையின் காலம்! **இந்த அறுவடையில் உங்களுக்கும் முக்கியமான பங்கு இருக்கிறது!**

இந்த 2026ம் ஆண்டிலும் நாம் செய்து முடிக்க வேண்டிய அனேக ஊழியத் திட்டங்களை கர்த்தர் கொடுத்திருக்கிறார். அதை செய்து முடிக்க, **உங்கள் ஜெபம் தேவை.**

உங்கள் **ஜெபத்தை அதிகப்படுத்துங்கள். இயேசு கிறிஸ்துவை அறிவியுங்கள்!** உங்களை கொண்டும் கர்த்தர் அற்புதங்களை செய்யப் போகிறார்! நீங்கள் அதை **விசுவாசியுங்கள்!** கர்த்தருக்காக **செயல்படுங்கள்!**




**எனக்காக**வும், நம் '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழிய **குடும்பத்திற்காக**வும் **தினமும் ஜெபியுங்கள்**. நாங்களும் **உங்களுக்காக ஜெபிக்கிறோம்!**

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



# "கேளுங்கள்,... கொடுக்கப்படும்; தேடுங்கள்,... கண்டடைவீர்கள்; தட்டுங்கள்,... திறக்கப்படும்;"

மத்தேயு 7:7.

பிரியமானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், உங்களுக்கு என் **புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

இந்த 2026**ம் ஆண்டு, உங்களுக்கு** மிகுந்த ஒரு **ஆசீர்வாதத்தின் ஆண்டாகவே இருக்கும்! விசுவாசியுங்கள்!** ஏனென்றால், **ஆசீர்வதிக்கிற** கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து உங்களோடு கூட இருக்கிறார்!**

ஒவ்வொரு வருடமும் கர்த்தர் நமக்கு கொடுக்கிற வாக்குத்தத்தத்தை வைத்து நாம் ஜெபிக்கும்போது, அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்க்கையில் அருளிச் செய்வதில், அவர் என்றென்றும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்!

கடந்த 2025ம் வருடத்தில், "கலங்காதே! '**நான்** [கர்த்தர்]... **உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்.**" [யாத். 20:24] என்று வாக்குப் பண்ணிய இயேசு கிறிஸ்து அனேகரை பிரத்தியட்சமாக வந்து சந்தித்து, அவர்களுக்கு அற்புதங்களை செய்து ஆசீர்வதித்த சாட்சிகளை அறிந்து, நான் கர்த்தரை துதிக்கிறேன்!

அதாவது, "கர்த்தர் கொடுத்திருக்கிற இந்த வாக்குத்தத்தம் எனக்குரியது!" என்று விசுவாசித்து நீங்கள் ஜெபித்தால், அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தை நிச்சயமாக உங்களால் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் அனேகர், "எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது! ஆனால், கர்த்தர் என்னோடு கூட இருக்கிறார்! தினமும் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து ஜெபிக்கிறேன்! அது எனக்கு போதும்!" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் தவறல்ல! ஏனென்றால், அது அவர்களுடைய விசுவாசம்! அவரவர்களுடைய விசுவாசத்தின்படிதான் கர்த்தர் ஆசீர்வதிப்பார்!

இந்த 2026ம் வருடத்தின் வாக்குத்தத்தத்திற்காக நான் தேவ சமூகத்தில் உபவாசத்தோடு காத்திருந்தபோது, "**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;**" [மத்தேயு 7:7] என்று, கர்த்தர் அற்புதமான ஒரு வாக்குத்தத்தத்தை கொடுத்தார்!

அதாவது கர்த்தர் உங்களை பார்த்து, "என் மக(னே)ளே, நீ என்னிடத்தில் **கேட்டால்**, அதை நான் உனக்கு **கொடுப்பேன்!** நீ என்னை தாகத்தோடு **தேடினால்**, நான் உனக்கு **வெளிப்படுவேன்!** நீ என் இருதய கதவை **தட்டினால்**, அது உனக்கு **திறக்கப்படும்!**" என்று வாக்குக் கொடுக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கரங்களில் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை உங்களுக்கு கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாகவேதான் இருக்கிறார். ஆனால், நீங்கள் செய்ய வேண்டியதை செய்வீர்களானால், அந்த ஆசீர்வாதங்களை எல்லாம் நிரம்பி வழியும்படி உங்களால் பெற்றுக் கொள்ள முடியும்.

உங்களுக்குரிய ஆசீர்வாதங்களை நீங்கள் அவரிடத்தில் கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். கர்த்தர் இந்த வருடத்திற்கென்று கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தின்படி, 3 காரியங்களை குறித்து நாம் தியானிப்போம்.

# கேளுங்கள், கொடுக்கப்படும்!



**"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;..."** மத்தேயு 7:7.

அதாவது, "என் மக(னே)ளே, உனக்கு என்ன வேண்டும்? **நீ கேட்கும்போது நான் உனக்கு தருவேன்!**" என்று கர்த்தர் சொல்கிறார்.

என்னிடத்தில் ஜெபிக்க வருகிற சிலரிடத்தில், "உங்களுக்கு என்ன காரியத்திற்காக நான் ஜெபிக்க வேண்டும்?" என்று கேட்டால், வாய் திறந்து பேச மாட்டார்கள். அவர்களோடு கூட வந்திருப்பவர்களில் யாராவதுதான் பேசுவார்கள். வாய் திறந்து பேசாத பட்சத்தில், அவர்களுக்கு என்ன தேவையென்று எப்படி அறிந்து கொள்ள முடியும்? இன்னும் சிலர், "கர்த்தருக்குத்தான் எல்லாம் தெரியுமே! அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர்தானே!" என்று, எதாவது சாக்குப் போக்குச் சொல்வார்கள்.

ஆனால் கர்த்தர், "சரிதான்! உனக்கு என்ன தேவையென்று எனக்கு நன்றாகவே தெரியும்! ஆனால், நீ என்னிடத்தில் கேட்க வேண்டும் அல்லவா?" என்று சொல்கிறார். அதாவது, "நீ கேட்டால், நான் அதை உனக்கு தருவேன்!" என்றுதான் கர்த்தர் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்! ஆகவே, நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி, **விசுவாசத்தோடு** கேட்க வேண்டும்.

"**என்** [இயேசு கிறிஸ்துவின்] **நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.**" [யோவான் 14:14] என்றும், "..., **நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்...**" [மத்தேயு 21:22] என்றும் கர்த்தர் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்.

எனவே, நீங்கள் என்ன காரியத்திற்காக கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டாலும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி **விசுவாசத்தோடு கேளுங்கள்**. அப்பொழுது நீங்கள் மிக சுலபமாக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வீர்கள்.

இயேசு கிறிஸ்து ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராக இந்த பூமியில் சுற்றித் திரிந்த சமயத்தில், '**பர்திமேயு**' என்கிற கண் பார்வை தெரியாத ஒரு மனிதன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அந்த வழியாக இயேசு கிறிஸ்து வருவதை அவன் கேள்விப்பட்டபோது, "இயேசுவே! தாவீதின் குமாரனே!..." என்று அவருடைய பெயரை சொல்லி, அவருக்கு கேட்கும்படியாக அதிக சத்தமாக கூப்பிட்டான்.

தன்னுடைய பெயரை சொல்லி கூப்பிட்ட அவனை தன்னிடத்தில் அழைத்து வரச் சொன்ன இயேசு கிறிஸ்து அவனிடத்தில், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அந்த மனிதன் "ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்." என்று சொன்னான். அப்பொழுது அவர் அந்த மனிதனுக்கு உடனே அற்புதம் செய்து, தெளிவான கண் பார்வையை கொடுத்தார்! **(மாற்கு 10:46-52).**

பாருங்கள்; இயேசு கிறிஸ்து அந்த மனிதனிடத்தில், "உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டபோது, "ஆண்டவரே, எனக்கு என்ன வேண்டுமென்று உமக்குத் தெரியாதா? எல்லாமே உமக்கு தெரியுமே! உமக்கு தெரியாதது என்ன இருக்கிறது?" என்று அவன் சொல்லவில்லை.

அவன் மிகுந்த விசுவாசத்தோடு, "ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்." என்றுதான் கேட்டுக் கொண்டான்.

கர்த்தருக்கு எல்லாமே தெரியும்; உண்மைதான்! ஆனால், நம்முடைய மன விருப்பத்தை தன்னிடத்தில் சொல்ல வேண்டுமென்றுதான் கர்த்தர் எதிர்பார்க்கிறார். எனவேதான், "**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;...**" [மத்தேயு 7:7] என்று கர்த்தர் நம்மை பார்த்து சொல்கிறார்.

ஒருமுறை கண் பார்வை தெரியாத 2 மனிதர்கள் இயேசு கிறிஸ்துவின் பின்பாக சென்று, "தாவீதின் குமாரனே...," என்று

அவருடைய பெயரை சொல்லி கூப்பிட்டு, "எங்களுக்கு இரங்கும்!" என்று கேட்டார்கள்.

அப்பொழுது இயேசு கிறிஸ்து அவர்களிடத்தில், "அதை செய்ய எனக்கு வல்லமை உண்டென்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம் ஆண்டவரே, விசுவாசிக்கிறோம்!" என்று சொன்னார்கள். அவர்கள் அந்த வார்த்தையை சொன்னவுடனே, அவர் அவர்களுக்கு தெளிவான கண் பார்வையை கொடுத்தார்! **(மத்தேயு 9:27-30).**

ஒருமுறை தொழு நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து, "ஆண்டவரே, உமக்கு சித்தமானால் என்னை சுகமாக்க உம்மால் முடியும்!" என்று சொன்னபோது, அவன் அற்புதமான சுகத்தை பெற்றுக் கொண்டான்! **(மத்தேயு 8:2,3).**

நூற்றுக்கு அதிபதியாக இருந்த ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து, தன் வேலைக்காரனுடைய சுகத்திற்காக மிகுந்த பணிவோடு அவரை வேண்டிக் கேட்டுக் கொண்டபோது, அவர் அவனுடைய விசுவாசத்தை பார்த்து, அவனுடைய வேலைக்காரனை சுகமாக்கினார்! **(மத்தேயு 8:5-13).**

ஒரு கானானிய ஸ்திரீ இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து மிகுந்த தாழ்மையோடு, "ஆண்டவரே, எனக்கு இரங்கும். என் மகள் பிசாசின் பிடியினால் கொடிய வேதனைப்படுகிறாள். அவளுக்கொரு விடுதலையை தாரும்." என்று சொல்லி கேட்டாள். அப்போது அவர் அவளுடைய விசுவாசத்தை பார்த்து, அவளுடைய மகளுக்கு பூரணமான விடுதலையை கொடுத்தார்! **(மத்தேயு 15:22-28).**

ஒரு தகப்பன், பிசாசின் ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த தன்னுடைய மகனின் விடுதலைக்காக இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து கேட்டபோது, அவர் அந்த மகனுக்குள் இருந்த பிசாசின் ஆவியை துரத்தி, அவனுக்கு நிரந்தரமான ஒரு விடுதலையை கொடுத்தார்! **(மத்தேயு 17:14-18).**



அதேபோல நீங்களும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி, **விசுவாசத்தோடு** அவரிடத்தில் **கேட்கும்போது**, எந்தவொரு காரியமானாலும் உங்களால் அதை **பெற்றுக் கொள்ள முடியும்**.

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு உங்களுக்கு என்ன வேண்டும்? வியாதியிலிருந்து சுகம் வேண்டுமா? அல்லது பிரச்சனைகள், பேராட்டங்களிலிருந்து உங்களுக்கு விடுதலை வேண்டுமா? ஆசீர்வாதம் வேண்டுமா? அல்லது ஜெயம் வேண்டுமா? தடைகள் மாறி, உங்கள் காரியங்கள் எல்லாம் வாய்க்க வேண்டுமா?

எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் விசுவாசத்தோடு கேட்பீர்களானால், கட்டாயம் அவைகளை பெற்றுக் கொள்வீர்கள்! ஏனென்றால், கர்த்தர் அதை உங்களுக்கு கொடுக்க ஆயத்தமாகவேதான் இருக்கிறார். அவரிடத்தில் வந்து விசுவாசத்தோடு கேட்டுக் கொண்ட ஒவ்வொருவரும் அற்புதங்களை பெற்றுக் கொண்டார்கள்! அவரை அண்டி வந்த யாருமே வெறுமையாக திரும்பிப் போவதில்லை!

அதேபோல **இன்றைக்கு உங்கள் வாழ்க்கையிலும் ஒவ்வொரு நாளும் அற்புதம் நடக்கப் போகிறது!** இந்த 2026ம் வருடம் முழுவதும் உங்களுக்கு அற்புதத்தின் ஆண்டாகவேதான் இருக்கப் போகிறது!

நீங்கள் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேட்கக் கேட்க, அத்தனை காரியங்களையும் பெற்றுக் கொள்வீர்கள். எனவேதான், "**நீங்கள் கேளுங்கள்**, அப்பொழுது **உங்களுக்கு கொடுக்கப்படும்!**" என்று கர்த்தர் சொல்கிறார். **(மத்தேயு 7:7).** நாம் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேட்கும்போது, கட்டாயம் அவர் நமக்கு அற்புதங்களை செய்வார்.

கோயம்புத்தூரில் கிறிஸ்தவரல்லாத பக்தியுள்ள ஒரு குடும்பத்தை சார்ந்த '**சுடலைமணி**' என்கிற தகப்பனாருக்கு சுமார் **20 வருடங்களாக** இடது **காது சுத்தமாக கேட்காது**. மட்டுமல்ல, **2 வருடங்களாக** அவருடைய **கண் பார்வையும் பாதிக்கப்பட்டு** இருந்தது. அதனால் மிகுந்த மன வேதனையோடு இருந்தார்.

அவர் தன்னுடைய குல தெய்வத்திற்கு சொந்தமாக கோவில் கட்டி, வாரத்திற்கு 2 முறையாவது பலி செலுத்தி, படையல் வைத்து, தெய்வ வணக்கம் செய்கிறவராக இருந்தார். ஆனால், ஒரு கட்டத்தில் அவருடைய 2 பிள்ளைகளும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்பட்டு, தவறாமல் தேவாலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார்கள். அதற்காக அவர் தன் பிள்ளைகளை தடை செய்யவில்லை.

"நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மீது பக்தியாக இருக்கிறீர்கள்! நான் என் குல தெய்வத்தின் மீது பக்தியாக இருக்கிறேன்; அவ்வளவுதான்!" என்று சொல்வார். அவரே தன் பிள்ளைகளை தேவாலயத்திற்கு கொண்டு வந்து விட்டு விட்டுப் போவார்.

ஒருமுறை அவருடைய பிள்ளைகள் நாலுமாவடியில் நடைபெறுகிற திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள புறப்பட்டபோது தகப்பனாரை பார்த்து, "அப்பா, எங்களுக்கு துணையாக நீங்களும் கூட்டத்திற்கு வாருங்கள். அங்கு திரளான மக்கள் கூட்டம் வரும். "அங்கு என்னதான் நடக்கிறது?' என்று சும்மா வந்து பாருங்கள்." என்று சொல்லி அழைத்தபோது, "பிள்ளைகள் ஆசையாக கூப்பிடுகிறார்களே! சரி, சும்மா சுற்றுலா மாதிரி போய் விட்டு வருவோம்!" என்று எண்ணி, அந்த தகப்பனார் தன் பிள்ளைகளோடு திறப்பின் வாசல் ஜெபத்திற்கு வந்தார்.



அன்றைக்கு ஜெபிக்கக் கூடி வந்திருந்த திரள் கூட்ட ஜனங்களை அவர் பார்த்தபோது மிகவும் ஆச்சரியப்பட்டு, "இவ்வளவு ஆயிரக்கணக்கான ஜனங்கள் இங்கு வருகிறார்கள் என்றால், இங்கு ஏதோவொரு காரியம் இருக்கிறது!" என்பதை உணர்ந்து கொண்டார்.

ஜெப வேளையில், "நீங்கள் இயேசு கிறிஸ்துவின் பெயரை சொல்லி அவரை நோக்கிக் கூப்பிட்டால், அவர் உங்களுக்கு கட்டாயம் அற்புதம் செய்வார்!" என்று சொல்லி, நான் ஜனங்களை ஜெபத்திற்குள்ளாக வழி நடத்திக் கொண்டிருந்தேன். அந்த தகப்பனார் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, "இவ்வளவு ஜனங்கள் வேண்டுதல் செய்கிறார்களே! இதில் ஏதோவொன்று இருக்கிறது! நமக்கு 20 வருடங்களாக காது கேட்கவில்லையே! நாமும் வேண்டுவோம்!" என்று சொல்லி, கண்களை மூடி, முதன்முறையாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி கூப்பிட்டு, "இயேசுவே, 20 வருடங்களாக என் இடது காது கேட்கவில்லை! அந்த காதில் ஒரு அற்புதம் செய்ய மாட்டீர்களா?" என்று சொல்லி ஒரு ஜெபத்தை செய்தார்; அவ்வளவுதான்! அந்த நொடிப் பொழுதே கர்த்தருடைய வல்லமை அவரை தொட்டு, அந்த காதை திறந்து விட்டது!

அவரை சுற்றிலும் இருந்த ஜனங்களின் ஜெபிக்கிற சத்தம் அவருக்கு மிகத் தெளிவாக கேட்டது. அவர் மிகவும் ஆச்சரியப்பட்டு, "ஒரு நிமிடம்தான் 'இயேசுவே,...' என்று அவருடைய பெயரை சொல்லி அவரை நோக்கிக் கூப்பிட்டேன். உடனே அவர் எனக்கு பதில் கொடுத்து விட்டாரே!" என்று, அவருக்குள் ஒரு விசுவாசம் உண்டாயிற்று!

தொடர்ந்து நான் கண்களில் பாதிப்போடு வந்திருந்த ஜனங்களின் சுகத்திற்காக ஜெபத்தை ஏறெடுத்தபோது, அவரும், "இயேசுவே, 2 வருடங்களாக எனக்கு கண் பார்வையும் தெளிவாக இல்லை. அதிலும் எனக்கொரு அற்புதம் செய்யுங்கள்." என்று சொல்லி ஜெபித்த அந்நேரமே, அவருடைய கண் பார்வையும் தெளிவாயிற்று!

பாருங்கள்; அந்த தகப்பனார் 2 அற்புதங்களை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார்! எவ்வளவு பெரிய சந்தோஷம்! நீங்கள் கேட்டால், **இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்வார்!**

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு உங்களுக்கு என்ன வேண்டும்? சுகம் வேண்டுமா? அல்லது விடுதலை வேண்டுமா? **உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேளுங்கள், அற்புதத்தை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்!**

திருப்பத்தூரை சார்ந்த, இயேசு கிறிஸ்துவை அறியாத, மிகுந்த பக்தியுள்ள '**திருமால்**'

என்கிற ஒரு சகோதரருக்கு திருமணமாகி சுமார் 15 **வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல்**, மற்றவர்கள் பேசுகிற பரிகாசமான, நிந்தையான வார்த்தைகளால் மிகவும் வேதனைப்பட்டு, மனதளவில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருந்தார்.

எவ்வளவோ பணம் செலவழித்து மருத்துவம் செய்து பார்த்தும், ஒரு பிரயோஜனமுமில்லை. "இனி கடவுளைத்தான் நம்ப வேண்டும்!' என்று சொல்லி, யாரெல்லாம் எந்தெந்த கோவிலுக்கு போகச் சொன்னார்களோ, எவ்வளவோ பணம் செலவு செய்து, தன் மனைவியோடு அங்கெல்லாம் போய் முறையிட்டு பிரார்த்தனை செய்து பார்த்தும், எந்த பயனுமில்லை.

மந்திரவாதியிடம் போய் ஆயிரக்கணக்கான பணம் செலவு செய்து மந்திரம் செய்து பார்த்தும், எந்த விதமான பயனுமில்லை. மருத்துவம் அவரை கைவிட்டது! 'தெய்வம்' என்று அவர் எதையெல்லாம் நம்பிப் போனாரோ, அவைகளெல்லாம் அவரை கைவிட்டன! மந்திரவாதம் அவரை கைவிட்டது! அவர் எடுத்த முயற்சிகள் எல்லாமே அவருக்கு தோல்வி! பெருத்த ஏமாற்றம்!

கடைசியில் அவருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது! மனம் சோர்ந்து போய், "மரித்து போய் விட்டால் நல்லது!" என்கிற மன நிலைமைக்கு வந்து விட்டார்! அந்த சமயத்தில்தான் அவருக்கு ஒரு யோசனை வந்தது. அது என்னவென்றால், "நாம் எத்தனையோ கோவில்களுக்கு போய் எல்லா கடவுள்களையும் கூப்பிட்டுப் பார்த்து விட்டோம்! ஆனால், அவைகளால் நமக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை!

ஆனால், கிறிஸ்தவர்கள் '**இயேசு**' என்கிற ஒரு கடவுளை வைத்திருக்கிறார்களே! அவரை நாம் இதுவரை கூப்பிட்டு பார்க்கவில்லையே! சரி, கடைசி முயற்சியாக அவரை நாம் கூப்பிட்டுப் பார்ப்போமே!" என்று எண்ணி, அதை குறித்து தன் மனைவியினிடத்தில் அவர் சொன்னபோது, அவர்களும் அதற்கு ஒத்துக் கொண்டார்கள்.

"**இயேசு**' என்கிற கடவுளை பற்றி நாம் எப்படி அறிந்து கொள்வது?" என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், 'இயேசு விடுவிக்கிறார்'–**ஜெபிக்கலாம் வாங்க!**' என்கிற (நேரலை) நிகழ்ச்சி டி.வியில் ஒளிபரப்பாவதை பற்றி கேள்விப்பட்டு, சில வாரங்களாக அந்த நிகழ்ச்சியை அவர்கள் தொடர்ந்து பார்க்க ஆரம்பித்தபோது, இயேசு கிறிஸ்துவை பற்றி தெளிவாக அறிந்து கொண்டார்கள்.

ஒருநாள் நிகழ்ச்சியில், குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்காக ('கர்ப்பத்தின் கனி' ஆசீர்வாதத்திற்காக) ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, கணவனும், மனைவியுமாக அவர்கள் இருவரும் மிகுந்த கண்ணீரோடு இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சொல்லி, அவரை நோக்கிக் கூப்பிட்டு, "இயேசுவே, உமக்காக வளர்க்க எங்களுக்கொரு குழந்தையை தாருங்கள்." என்று சொல்லி கேட்டார்கள். கர்த்தர் அவர்களுடைய அந்த ஜெபத்தை கேட்டு, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு குழந்தை செல்வத்தை அருளி, அவர்களை மகிழப் பண்ணினார்!

அவர்களுடைய துக்கம் நீங்கியது! நிந்தை, அவமானம் நீங்கியது! ஏமாற்றம் நீங்கியது! ஒரு பெரிய மகிழ்ச்சி உண்டானது!

அவர்களுக்கு அந்த அற்புதத்தை செய்தவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து!

அதே **கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கும் அதிசயங்களை செய்யப் போகிறார்!** இன்றைக்கு நீங்களும் **விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேளுங்கள்**. ஏனென்றால், "..., **கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்**;..." (மத்தேயு 7:8; லூக்கா 11:10) என்றுதான் இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கிறார்.

நீங்கள் எந்த இனம்? எந்த ஜாதி? எந்த மதம்? உங்களுடைய குடும்ப பின்னணி என்ன? என்றெல்லாம் அவர் எதையுமே பார்க்க மாட்டார். உங்களுடைய இருதயத்தில் விசுவாசம் இருக்கிறதா? நீங்கள் உண்மையான இருதயத்தோடு கூப்பிடுகிறீர்களா? என்பதை பார்த்துத்தான் கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்வார்.

ஆகவே, **விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேளுங்கள்**. அப்பொழுது, ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்க்கையில் **அற்புதம் நடக்கும்!**



# தேடுங்கள், கண்டடைவீர்கள்!

"...; **தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;...**" மத்தேயு 7:7.

"**உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர்** (இயேசு கிறிஸ்து) **சொல்லுகிறார்;...**" எரேமியா 29:13,14.

அதாவது, "என் முகத்தை தேடுங்கள்!" என்று கர்த்தர் சொல்கிறார். **(2 நாளா. 7:14)**. அப்படியானால், நாம் இயேசு கிறிஸ்துவை தேட வேண்டும். பொதுவாக நாம் அவரிடத்தில் ஆசீர்வாதங்களைத்தான் தேடுகிறோம். அவருடைய கைகளில் இருக்கிற நன்மைகளை பறித்துக் கொள்ளத்தான் நாம் விரும்புகிறோம். அதற்கும் மேலாக, அந்த ஆசீர்வாதங்களை எல்லாம் நமக்கு கொடுக்கிற கர்த்தரைத்தான் நாம் தேட வேண்டும்.

ஏனென்றால், அவர் மிகவும் இனிமையானவர்! மகிமையானவர்! அப்படிப்பட்ட கர்த்தர் நம்மோடு கூட இருந்தாலே போதும்; மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு இருப்பதாகத்தான் அர்த்தம்!

**தானியேல்**, "நான் உபவாசம் பண்ணி, கர்த்தரை ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேடினேன்." என்று சொன்னார். **(தானியேல் 9:3)**.

ஆனால் சிலர், "கடவுளை எவராலும் பார்க்க முடியாது! யாராவது, "நான் கடவுளை பார்த்தேன்!" என்று சொன்னால், நம்பாதீர்கள்!" என்று சொல்வார்கள். அதற்கு வசதியாக, "**தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை,...**" (யோவான் 1:18) என்கிற வேத வசனத்தை எடுத்துப் பேசுவார்கள்.

ஆனால் கர்த்தர் என்ன சொல்கிறார் என்றால், "முழு இருதயத்தோடு நீங்கள் என்னை தேடினால், நான் உங்களுக்கு காணப்படுவேன்!" என்று வாக்குக் கொடுக்கிறார். அப்படியானால், எது உண்மை?

பரிசுத்த **பவுல்** சவுலாக இருந்தபோது, ஒருநாள் அவர் தமஸ்குவுக்குப் போகிற வழியில் இயேசு கிறிஸ்து அவருக்கு வெளிச்சத்தில் தரிசனமாகி, நேரடியாக அவரோடு பேசி, அவரை தம்முடைய வல்லமையான ஊழியக்காரனாக மாற்றினார்! **(அப். 9ம் அதிகாரம்)**.

அப்படியானால், கர்த்தர் ஒரு மனிதனை சந்திப்பது உண்மை! அதிலும் முழு இருதயத்தோடு நாம் அவரை தேடினால், தன்னை அவர் நமக்கு வெளிப்படுத்துவதும் உண்மை! **அவரை நாம் பார்க்க முடியும்! அவரை நாம் தரிசிக்க முடியும்! அவருடைய குரலை நாம் கேட்க முடியும்!**

ஆனால், அதற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். முழு இருதயத்தோடு, தாகத்தோடு, சுயநலமில்லாதபடி கர்த்தரை நாம் தேட வேண்டும். அப்போதுதான் கர்த்தர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவார்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவிலுள்ள பஞ்சாப் மாநிலம்–'லூதியானா' என்கிற பட்டணத்திலுள்ள '**ராம்பூர்**' என்கிற கிராமத்தில் ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். அவருக்கு '**சுந்தர்**' என்கிற ஒரே ஒரு மகன் இருந்தான்.

மிகுந்த பக்தியுள்ள அவனுடைய தாயார், அவனுடைய சிறு வயதிலிருந்தே அவனுக்கு மிகுந்த அன்போடு தெய்வ பக்தியை ஊட்டி வளர்த்தபடியினால், அவனுக்குள் தெய்வத்தின் மீது அதீதமான ஒரு தாகம் உண்டானது.

அவன் இளம் வாலிபனாக இருந்த சமயத்தில், திடீரென்று அவனுடைய தாயார் மரித்துப் போய் விட்டார்கள்! தாயினுடைய அன்பை இழந்த அந்த வாலிபன், தன் வாழ்க்கையையே இழந்து விட்டதைப்போல் உணர்ந்தான். அந்த சமயத்தில் தாயினுடைய அன்பை காட்டிலும், ஆறுதலாக இருக்கக் கூடியது கடவுள் ஒன்றுதான் என்று எண்ணி, அதற்காக பல மத சம்மந்தமான

புத்தகங்களை எல்லாம் வாங்கி வாசித்து, தாயார் தனக்கு சொல்லிக் கொடுத்த கடவுளை தேட ஆரம்பித்தான். அதற்கான பிரார்த்தனைகளை எல்லாம் செய்து பார்த்தான். ஆனால், எதிலும் அதற்கான பலன் அவனுக்கு கிடைக்கவில்லை!

அவன் எதையெல்லாம் ‘தெய்வம்!’ என்று நம்பினானோ, அவைகளை எல்லாம் கூப்பிட்டு பார்த்தான். ஆனால், அவனுக்கு எல்லாம் ஏமாற்றமாகவேதான் முடிந்தது.

மிகவும் விரக்தியடைந்தவனாக, ஒருநாள் அவன் தன்னுடைய வீட்டின் மாடியில் இருந்த அறையில் இருந்து கொண்டு, “கடவுள்!” என்று ஒருவர் இருந்தால், அவர் நாளை காலை இத்தனை மணிக்குள் என்னை வந்து சந்திக்க வேண்டும்! நான் அவரை பார்க்க வேண்டும்! அவரோடு நான் பேச வேண்டும்! இல்லா விட்டால், நான் இரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொள்வேன்!” என்று முடிவெடுத்தான்.

ஏனென்றால், அந்த அளவிற்கு அவனுக்குள் தெய்வத்தை குறித்த ஒரு தாகம் இருந்தது. அன்று இரவு முழுவதும் அவன் அதற்காக வேண்டுதல் செய்து கொண்டே இருந்தான். அதிகாலை நேரத்தில், திடீரென்று அந்த அறைக்குள் ஒரு பிரகாசமான வெளிச்சம் வந்தது!

அவன் பயந்து போன நிலைமையில் அந்த வெளிச்சத்தை பார்த்தபோது, அதற்குள்ளிருந்த ஒரு அழகான உருவத்தை பார்த்தான். அந்த உருவம் அவனை பார்த்து, “மகனே, நான்தான் நீ தேடுகிற மெய்யான கடவுளாகிய



இயேசு கிறிஸ்து! நீ முழு இருதயத்தோடு என்னை தேடியபடியினால் என்னை உனக்கு வெளிப்படுத்த வந்தேன்.” என்று சொல்லி, தன்னை அவனுக்கு பிரத்தியட்சமாக வெளிப்படுத்தினார்.

அதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. ஏனென்றால், “இயேசு கிறிஸ்து’ என்றால், அவர் ஒரு வெளி நாட்டுக் கடவுள்! நமக்கும், அவருக்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை! நம் இந்தியாவில் எத்தனையோ கடவுள்கள் இருக்கிறது! அதில் எதாவது ஒன்று நம்மை சந்திக்கும்!” என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தான்.



ஆனால், தன்னை சந்தித்த **இயேசு கிறிஸ்துதான் மெய்யான கடவுள்** என்பதை அறிந்து கொண்ட அவனுடைய வாழ்க்கையில் அன்றிலிருந்து ஒரு பெரிய மாற்றம் உண்டானது!

அதற்குப் பிறகு அவன் தன் வாழ்நாள் முழுவதும் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, திருமணமே செய்து கொள்ளாமல், ‘**சாது சுந்தர் சிங்**’ என்கிற பெயரில், உலகத்தின் பல பகுதிகளுக்குப் போய் ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தார். அந்த தேவ மனிதர், தான் கர்த்தரை தரிசித்த பல அனுபவங்களை தன்னுடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.



இன்னொரு உண்மை சம்பவத்தை சொல்கிறேன், பாருங்கள்:

தமிழ்நாட்டிலுள்ள இராமநாதபுரத்தை சார்ந்த ஒரு வாலிபன் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், கடவுள் நம்பிக்கை இல்லாமல், கடவுள் மறுப்பு கொள்கையுடைய ஒரு இயக்கத்தில் போய் சேர்ந்து கொண்டான். அவனுடைய வாழ்க்கை குடிப்பதிலும், புகை பிடிப்பதிலுமாகத்தான் இருந்தது. திடீரென்று ஒருநாள் இயேசு கிறிஸ்து அவனை சந்தித்து, தன்னை அவனுக்கு வெளிப்படுத்தினார்!

அதன் நிமித்தமாக, அவனுக்குள் ஒரு பெரிய இரட்சிப்பின் சந்தோஷம் வந்து விட்டது! பாவப் பழக்க வழக்கத்திலிருந்து அவனுக்கு நிரந்தரமான ஒரு விடுதலை கிடைத்து விட்டது! அவன் சாது சுந்தர் சிங் அவர்களை பற்றிய சரித்திரப் புத்தகத்தை வாங்கி வாசித்தபோது, ‘இயேசு கிறிஸ்து இப்படியும் தன்னை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறவராக இருப்பாரானால், எனக்கும் அவர் தன்னை வெளிப்படுத்த வேண்டும்!” என்கிற தாகம் அவனுக்குள்ளாக உண்டாயிற்று.

ஒருநாள் அந்த வாலிபன் தன்னுடைய வீட்டிலிருந்த ஒரு அறைக்குள் போய், கதவை மூடிக் கொண்டு, “எத்தனை நாட்களானாலும் பரவாயில்லை! நான் கர்த்தரை தரிசித்தே ஆக வேண்டும்!” என்கிற தணியாத தாகம் கொண்டவனாக, உபவாசத்தோடு

மணிக்கணக்காக ஜெபித்து, முழு இருதயத்தோடு, மிகுந்த தாகத்தோடு கர்த்தரை தேட ஆரம்பித்தான்.

திடீரென்று அந்த அறைக்குள் பிரகாசமான ஒரு ஒளி வருவதை அவன் பார்த்தான். அந்த ஒளிக்கு மத்தியில், மின்னலை போன்ற ஒரு உருவம் நின்று கொண்டிருப்பது அவனுக்கு தெரிந்தது. அவன் கூர்ந்து பார்த்தபோது, அதற்குள்ளிருந்து இயேசு கிறிஸ்து தரிசனமாகி, தன்னை அவனுக்கு வெளிப்படுத்தியது மாத்திரமல்ல, அவனை ஒரு தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணினார்.

அன்றைக்கு கர்த்தரை தரிசித்த அந்த வாலிபன்தான், இன்றைக்கு கர்த்தருடைய ஊழியத்தை வல்லமையாக செய்து கொண்டிருக்கிற நம்முடைய **அன்பு சகோதரர்**, 'தீர்க்கதரிசி'– **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்கள்!

பாருங்கள்; கர்த்தர் தம்மை நமது சகோதரர் அவர்களுக்கு வெளிப்படுத்தி காண்பித்து, தான் ஒருவர்தான் ஜீவனுள்ள தேவன் என்பதை விளங்கப் பண்ணினார்!

ஆகவே, நாமும் கர்த்தரை முழு இருதயத்தோடு தேடினால், அவரை கண்டுபிடிக்க முடியும். நான் ஏற்கெனவே சொன்னபடி, **யோவான் 1:18**ம் வசனத்தை வைத்துக் கொண்டு, "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை!" என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள், ஜெபமே பண்ணாத சோம்பேறி கிறிஸ்தவர்கள்! அவர்கள் சும்மா கடமைக்கென்று ஒரு ஜெபத்தை செய்வார்கள்; அவ்வளவுதான்! அவர்களுக்கு, "கர்த்தருடைய முகத்தை தேட வேண்டும்! அவருடைய பாதத்தில் காத்திருக்க வேண்டும்! அவருடைய குரலை கேட்க வேண்டும்!" என்கிற சிந்தையே இருக்காது!

ஆனால் அந்த வேத வசனத்தின் பின்பகுதியில், "..., **பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே** [இயேசு கிறிஸ்து] **அவரை** [பிதாவை] **வெளிப்படுத்தினார்**." [யோவான் 1:18] என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

அதாவது, இயேசு கிறிஸ்து பிதாவை நமக்கு வெளிப்படுத்தினார்! பிதாவாகிய தேவன் காணக் கூடாதவர்! வானதி வானங்களும் கொள்ளாத அவரை யாராலும் பார்க்க முடியாது. ஏனென்றால், அவர் ஆவியாக இருக்கிறார்! ஆகவே, பிதாவாகிய தேவனை நமக்கு வெளிப்படுத்தத்தான், இயேசு கிறிஸ்து ஒரு மனிதனாக இந்த பூமிக்கு வந்தார்!

எனவே, கர்த்தரை நம்மால் பார்க்க முடியும்! அவரை நம்மால் தரிசிக்க முடியும்! அவருடைய குரலை நம்மால் கேட்கவும் முடியும்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்களும் தரிசிக்கலாம்! அவருடைய குரலை நீங்களும் கேட்கலாம்! **நீங்கள் முழு இருதயத்தோடு கர்த்தரை தேடினால், அவரை உங்களால் கண்டுபிடிக்க முடியும்!**

ஏனென்றால், அவர் உங்களோடு பேசுகிற ஒரு தேவனாக இருக்கிறார்! அவர் உங்களுக்கு ஆலோசனை கொடுத்து, அழகாக உங்களை வழி நடத்துவார்!

# தட்டுங்கள், திறக்கப்படும்!



"...; **தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்**;" மத்தேயு 7:7.

கர்த்தர் இன்றைக்கு உங்களை பார்த்து, "என் மக(னே)ளே, நீ தட்டினால் உனக்கு திறக்கப்படும்!" என்று சொல்கிறார்.

இதை குறித்து இயேசு கிறிஸ்து சொன்ன ஒரு உவமையை பாருங்கள்:

ஒரு மனிதன் நடு இரவு நேரத்தில் பக்கத்து வீட்டிலிருக்கிற தன் சிநேகிதனுடைய வீட்டுக் கதவை தட்டி அவனை எழுப்பி, "என் சிநேகிதன் ஒருவன் பசியோடு என் வீட்டிற்கு வந்திருக்கிறான். அவனுக்கு கொடுக்க என் வீட்டில் சாப்பாடு இல்லை. ஆகவே, ஒரு 3 அப்பங்களை நீ எனக்கு கடனாக கொடுத்தால், அதை அவனுக்கு கொடுத்து, அவனுடைய பசியை ஆற்றுவேன்." என்று சொல்லி கேட்டான்.

அதற்கு அவன், "இந்த நடு இரவு நேரத்தில் என்னை எழுப்பி தொந்தரவு செய்யாதே. நான் படுத்து விட்டேன். என் பிள்ளைகள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் என்னால் உனக்கு எதுவும் தர முடியாது." என்று சொன்னான்.

என்றாலும் மனது கேட்காமல், தன் சினேகிதன் தன்னை மிகவும் வருந்திக் கேட்டபடியினால், சிரமம் பாராமல் எழும்பி, அவன் கேட்டதை அவனுக்கு கொடுப்பான்." என்று இயேசு கிறிஸ்து சொன்ன ஒரு சம்பவம் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. **(லூக்கா 11:5-8)**.

அதேபோல, நீங்களும் தட்டினால் உங்களுக்கு திறக்கப்படும்! உங்களுக்காக மட்டுமல்ல; உங்களுடைய சினேகிதர்களுக்காக, சொந்த பந்தங்களுக்காக, உங்கள் அருகாமையில் வசிக்கிற மற்ற மக்களுக்காக, உங்கள் கிராமத்தில் இருக்கிற மக்களுக்காக, உங்கள் பட்டணத்தில் இருக்கிற மக்களுக்காக, உங்கள் தேசத்தில் இருக்கிற மக்களுக்காக, கர்த்தருடைய இருதய கதவை நீங்கள் தட்ட வேண்டும்.

"ஆண்டவரே, இந்த ஜனங்களுக்கு இரக்கம் செய்வீராக! இவர்களை மன்னித்து, இரட்சித்து, உம்முடைய பிள்ளைகளாக மாற்றி விடுவீராக!" என்று சொல்லி நீங்கள் தட்டிக் கொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களுக்காக பிரார்த்தனை செய்வது என்பது, கர்த்தருக்கு பிரியமான, எவ்வளவு பெரிய ஒரு பாக்கியமான காரியம் தெரியுமா?

"..., **எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்**;

...**நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது**." (1 தீமோத்தேயு 2:1-3) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

மற்றவர்களுடைய பாரத்தை நம்முடைய பாரமாக நாம் ஏற்றுக் கொண்டு, அவர்களுக்காக தேவ சமூகத்திலே நின்று பரலோகத்தின் கதவை தட்டினால், கட்டாயம் கர்த்தர் பதில் தருவார்!



உங்கள் பக்கத்து வீடுகளில் வசிப்பவர்களுக்காக, உங்களோடு கூட வேலை பார்க்கிறவர்களுக்காக, உங்கள் சினேகிதர்களுக்காக, உங்கள் உறவினர்களுக்காக மட்டுமல்ல; இன்னும் இயேசு கிறிஸ்துவை அறியாமல் இருக்கிற கோடிக்கணக்கான மக்களுக்காக கர்த்தருடைய சமூகத்தில் நின்று, "ஆண்டவரே, நீர் உம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் எல்லோரையும் இரட்சிப்பீராக!" என்று சொல்லி, நீங்கள் கருத்தாக கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளும்போது, அற்புதம் நடக்கும்!

மட்டுமல்ல, "**நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே** (ஜெபம்) **செய்யவேண்டும்**." (1 தீமோத்தேயு 2:2) என்றும் கர்த்தருடைய வார்த்தை நம்மை வலியுறுத்தி சொல்கிறது.

கர்த்தர் சொல்கிறபடி நீங்கள் வேண்டிக் கொள்வீர்களானால், உங்களுடைய தேசத்தில் அமைதியும், சமாதானமும், நல்லொழுக்கமும் காணப்படும்.

கர்த்தர் இன்றைக்கு உங்களுடைய வேண்டுதலுக்காகத்தான் காத்திருக்கிறார். அவர் இன்றைக்கு உங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறபடி நீங்கள் பரலோகத்தின் கதவை தட்டுவீர்களா? மற்றவர்களுக்காக நீங்கள் பரிந்து பேசுவீர்களா? மெய்யான தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை அறியாமல் அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், பாவ-சாபங்களுக்குள் சிக்கித் தவிக்கிற மக்கள் விடுவிக்கப்படவும் நீங்கள் கர்த்தரிடத்தில் கருத்தாக விண்ணப்பம் பண்ணினால், கட்டாயம் அந்தக் காரியத்தில் மாற்றங்களையும், அற்புதங்களையும் நீங்கள் காண்பீர்கள்!

உங்களை ஆசீர்வதிப்பதற்காகத்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்தார்!

ஆகவே, கர்த்தர் இந்த 2026ம் வருடத்திற்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தின்படி, **விசுவாசத்தோடு** அவரிடத்தில் **நீங்கள் எதை கேட்கிறீர்களோ**, **அதை பெற்றுக் கொள்வீர்கள்!**

**விசுவாசத்தோடு** கர்த்தரை **தேடுங்கள்**; நீங்கள் அவரை **கண்டடைவீர்கள்! விசுவாசத்தோடு** அவருடைய இருதய கதவை **தட்டுங்கள்**; உங்களுக்காக கதவு **திறக்கப்படும்!**

கர்த்தர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தை தினமும் சொல்லி, அவரை ஸ்தோத்தரித்து **ஜெபியுங்கள்**. அப்பொழுது தினந்தோறும் **அற்புதங்களை காண்பீர்கள்!** நீங்கள் ஜெபித்து கேட்டுக் கொள்கிற ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்து, உங்களை ஆசீர்வதித்து மகிழப் பண்ணுவார்!

**விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:**



நல்ல பிதாவே, இந்த 2026ம் வருடத்திற்கு நீர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

இந்த வருடத்தின் ஒவ்வொரு நாளும், உம்முடைய வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை எனக்கு தந்தருள்வீராக!

என் தேவைகளுக்காக உம்மிடத்தில் விசுவாசத்தோடு கேட்கிறேன், தடைகளை மாற்றி அவைகளை எனக்கு சந்தித்துக் கொடுப்பீராக!

இன்னும் நான் உம்மை அறிந்து கொள்ளும்படியாக மிகுந்த தாகத்தோடு உம்மை தேடுகிறேன், நீர் உம்மை எனக்கு வெளிப்படுத்தி, என் ஆவிக்குரிய வாழ்க்கையை ஆசீர்வதிப்பீராக!

உம்மை அறியாமலிருக்கிற மக்களுக்காக உம்முடைய பரலோக கதவை நான் தட்டுகிறேன், அவர்களை இரட்சித்து, உம்முடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துவீராக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!

வேலூர் மாவட்டம்,
திருப்பத்தூரில்
பரிசுத்த உபவாச ஜெப முகாம்!



நாளும், நேரமும்: 2026
பிப்ரவரி 5 (வியாழன்)
காலை 5:00 மணிமுதல்,
பிப்ரவரி 7 (சனி)
மதியம் 1:00 மணிவரை.

இடம்: அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்,
கிறிஸ்து குல ஆசிரமம் அருகில்,
திருப்பத்தூர்.

எழுப்புதல் தேவ செய்தியாளர்கள்:
சகோ. G.P.S. ராபின்சன், சகோ. C. எபிநேசர் பால்,
சகோ. L. வின்செண்ட் ராஜ், Pr. ஆஸ்பார்ன் ஜெபத்துரை,
சகோ. மோகன் சி. லாசரஸ்.

முக்கிய குறிப்பு: வியாதியஸ்தர்களையோ, பிசாசு பிடித்தவர்களையோ, அவிசுவாசிகளையோ, 12 வயதிற்குட்பட்ட சிறு பிள்ளைகளையோ கட்டாயம் அழைத்து வர வேண்டாம். கண்டிப்பாக அவர்களுக்கு அனுமதி இல்லை.

மேலும் விபரங்களுக்கு: (+91) 99626 02777, 99626 48777, 99626 82777.



நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் தகவல்களை WhatsAppல் அறிந்து கொள்ள இந்த QR Codeஐ Scan செய்யவும்.





# சிறு பிள்ளைகளை மனந்திரும்பச் செய்த (47வது) சிறுவர் எழுப்புதல் முகாம்!

**'சிறு பிள்ளைகள் மத்தியிலும் எழுப்புதல் வர வேண்டும்!'** என்கிற உன்னதமான தரிசனத்தோடு, கடந்த **46 ஆண்டு**களாக நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் மூலமாக **சிறுவர் எழுப்புதல் முகாம்** நடைபெற்று வருகிறது. இம்முகாம்களின் மூலமாக இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்ற அனேக பிள்ளைகள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டவர்களாக, இன்றைக்கு தேவ ஊழியர்களாக, மிஷனெரிகளாக கர்த்தருக்கென்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வருடமும் கடந்த (2025) அக். 2ம் தேதியன்று, (47வது) **சிறுவர் எழுப்புதல் முகாம்** நடைபெற்றது. இதில், சுமார் **3,000**க்கும் அதிகமான பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். இந்த முகாம், **"காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்."** (எபேசியர் 5:16) என்கிற வேத வசனத்தின் அடிப்படையில், "Time **இருக்கா?"** என்கிற தலைப்பில் ஜெபத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.



சகோதரி ஆஷ்லி எபெனேசர்

பாடல் வேளையில், **"உலக மக்களிடத்தில் பேசுவதற்கு உனக்கு நேரம் இருக்கிறது! ஆனால், இயேசு கிறிஸ்துவினிடத்தில் பேசுவதற்கு உனக்கு நேரம் இருக்கிறதா?"** என்று பாடப்பட்ட பாடலின் மூலமாகவும், குறு நாடகங்களின் மூலமாகவும் அனேக பிள்ளைகள் தங்கள் தவறை உணர்ந்து, கண்ணீரோடு **மனந்திரும்பினார்கள்.**

நமது சகோதரி **ஆஷ்லி எபெனேசர்** அவர்கள், **'பிசாசானவன், கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியங்களில் சிறு பிள்ளைகளை ஈடுபடுத்தி, இயேசு கிறிஸ்துவை பற்றியும், எழுப்புதலை பற்றியும் அவர்களை யோசிக்க விடாமல் வைத்திருப்பான்!'** என்பதாக தேவ செய்தியை பகிர்ந்து கொண்டு ஜெபித்தபோது, அனேக பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் இடம் கொடுத்தார்கள்.

அதன் பின்பு பிள்ளைகளை வகுப்பு வாரியாக பிரித்து, குழுவாக அமர வைத்து, அவர்களுக்கு இரட்சிப்பின்





பாடல் - ஆராதனை வேளை




இளம் வாலிபர்களுக்கு ஆலோசனை

முக்கியத்துவத்தை பற்றியும், அபிஷேகத்தின் அவசியத்தை பற்றியும் கற்றுக் கொடுக்கப்பட்டது.

காலை வேளையில் இளம் வாலிபர்களுக்கு (Teen Age) சகோதரி **கிருபா** அவர்கள் ஆவிக்குரிய அனேக ஆலோசனைகளை வழங்கினார்கள். மாலை வேளையில் சகோ. **சாம் ஜெபராஜ்** அவர்கள், கடைசிக் கால எழுப்புதலுக்கு தேவையான அபிஷேகத்தை பெற்றுக் கொள்ளத் தக்கதாக அவர்களை ஜெபத்தில் வழி நடத்தினார்கள்.

இறுதியாக நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், வந்திருந்த ஒவ்வொரு பிள்ளைகளையும் தனித்தனியாக ஆசீர்வதித்து ஜெபித்தார்கள்.

அனைத்து சிறு பிள்ளைகளுக்கும் காலையிலும், மாலையிலும் இனிப்பு மற்றும் Ice Cream வழங்கப்பட்டது. இந்த முகாமில் கலந்து கொண்ட ஒவ்வொரு பிள்ளைகளும் எழுப்புதல் தரிசனத்தை பெற்றுக் கொண்டவர்களாக கடந்து சென்றார்கள். அவர்கள் கர்த்தருக்கென்று எழும்பி பிரகாசிக்க, **தொடர்ந்து ஜெபியுங்கள்**. – ஒருங்கிணைப்பாளர்.


தனித்தனி வகுப்புகள்

## சிறுவர் எழுப்புதல் முகாமில் கர்த்தர் எழுப்பிய சாட்சிகளில் சில...

### அடிமைத்தனத்திலிருந்து விடுதலை!



அனேக நாட்களாக **செல்போனுக்கு அடிமை**ப்பட்டிருந்தேன். ஜெப வேளையில் விடுதலை வேண்டி நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கர்த்தர் என்னை **அபிஷேகித்து**, அந்த **அடிமைத்தனத்திலிருந்து** எனக்கு **விடுதலை**யை கொடுத்தார். – **ஷேரன்**.

### ஆத்தும பாரத்தை கொடுத்தார்!



ஜெப வேளையில் ஜெப அபிஷேகத்திற்காக மிகுந்த பாரத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, என்னை **ஜெப அபிஷேகத்தினால் நிரப்பி**, தாங்க முடியாத **ஆத்தும பாரத்தை**யும் எனக்கு கொடுத்தார். – **கிஷோர்**, ஒட்டன்சத்திரம்.

### வலி நீங்கி, நடக்க முடிகிறது!



என் **கணுக் காலில்** 2 நாட்களாக இருந்த **வலி**யினால், காலை ஊன்றி **நடக்க முடியாமல்** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, அந்த **வலி நீங்கி**, என்னால் நன்றாக **நடக்க முடிந்தது**. – **லீதியாள்**, ஸ்ரீவைகுண்டம்.


அபிஷேக வேளை

### பெலவீனம் நீங்கியது!

மிகுந்த **பெலவீனத்**தோடுதான் இந்த முகாமிற்கு வந்தேன். அதனால் தேவ செய்தியை



கவனிக்கவோ, ஜெபம் பண்ணவோ என்னால் முடியவில்லை. ஜெப வேளையில், கர்த்தர் என் மீது தம்முடைய **அக்கினி அபிஷேகத்தை** ஊற்றினார். அப்பொழுது **பெலவீனம் நீங்கி**, உற்சாகத்தைப் பெற்றுக் கொண்டேன். – **அன்சி**.

### தரிசனத்தில் பேசினார்!

ஜெப வேளையில் கர்த்தர் என்னை அளவில்லாமல் **அபிஷேகித்தார்**. அப்போது எனக்கு முன்பாக ஒரு தேவ தூதன் தரிசனத்தில் தோன்றி, "நீ உன் பட்டயத்தை கையில் எடு." என்று சொன்னபோது, என் ஆவிக்குரிய கண்கள்



திறக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை தரிசித்தேன். அப்போது அவர், "**நான் சீக்கிரமாக வரப் போகிறேன்**. உன்னைப் போன்ற சிறு பிள்ளைகளை நீ ஆயத்தப்படுத்து." என்று சொன்னார். – **ஜெர்சா**, பார்வதிபுரம்.

### புது இருதயம் தந்தார்!

நான் **கீழ்படியாதவனாக**, அடிக்கடி என் தாயாரிடத்தில் சண்டை போடுகிறவனாக இருந்தேன். ஜெப வேளையில், எனக்கு புது இருதயத்தை தரும்படியாக இயேசப்பாவினிடத்தில் வேண்டினேன். அவர் என்னை **அபிஷேகத்தினால் நிரப்பி**, என் **இருதயத்தை புதிதாக மாற்றி**னார். – **ஜோயல் கிங்ஸ்டன்**, பெங்களூரு.





# கர்த்தரை துதித்து, மகிமைப்படுத்துங்கள்!

## கடந்த 2025ம் வருடம் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தை எழுப்புதலின் பாதையில் நடத்தி வந்த கர்த்தரின் மகத்துவங்கள்!



பிரியமானவர்களே,

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் எஜமானாக இருக்கிற இயேசு கிறிஸ்து, தான் வாக்குக் கொடுத்த **யாத். 20:24**ன்படியே, கடந்த **2025ம் வருடம் முழுவதும்** நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் கூடவே இருந்து எழுப்புதல் திட்டத்தை நிறைவேற்றி, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்! இந்த ஊழியத்தை **நேசித்து ஜெபிக்கிற**, **கொடுத்து தாங்குகிற உங்களுக்கு** என் **மனமார்ந்த நன்றி**யினை தெரிவித்துக் கொள்வதோடு, கர்த்தர் செய்த மகத்துவமான காரியங்களை உங்களோடு கூட பகிர்ந்து கொள்வதில் எனக்கு மிகுந்த சந்தோஷம்! இதை வாசிக்கிற நீங்களும் **கர்த்தரை துதித்து**, **மகிமைப்படுத்துங்கள்!**

## எழுப்புதல் தரிசன ஊழியங்கள்!

### அற்புதப் பெருவிழாக்கள்!

கடந்த காலங்களில் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, **அதிகமான ஜெபங்கள்** ஏறெடுக்கப்பட்டது. "**இனி சுவிசேஷம் அறிவிப்பதை தீவிரப்படுத்த வேண்டும்!**" என்று ஆவியானவர் திருவுளம்பற்றி இருக்கிறபடியினால், **ஈரோடு**, **நந்தம்பாக்கம்** மற்றும் **தீவுத் திடல்** (சென்னை), **சேலம்**, **நாகர்கோவில்**, **ஊட்டி** ஆகிய இடங்களில் **அற்புதப் பெருவிழா**க்கள் நடத்தப்பட்டதின் மூலமாக சுமார் **2,50,000**க்கும் அதிகமான மக்களுக்கு **நேரடியாக சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு கூட்டத்திலும் நடைபெற்ற அற்புத-அடையாளங்கள் மூலமாக, '**இயேசு கிறிஸ்து இன்றைக்கும் ஜீவிக்கிறார்!**' என்பது நிரூபிக்கப்பட்டது. ஆந்திர மாநிலம்-**குண்டூர் கூடாரப் பண்டிகை**யில் கூடி வந்திருந்த பல லட்சக்கணக்கான மக்களுக்கு நற்செய்தியாக **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது.

### எழுப்புதல் உபவாச ஜெபங்கள்!

ஆரம்பித்திருக்கிற எழுப்புதல் தொடர்ந்து பற்றியெரிந்து தேசமெங்கும் பரவ வேண்டுமென்பதற்காக **3 முறை சென்னை**யிலும், **சிதம்பரம்**, **பல்லடம்**, **திருநெல்வேலி**, **இராமநாதபுரம்**, **நாகர்கர்நூல்** (தெலுங்கானா), **பெங்களூரு** (கர்நாடகா) ஆகிய பட்டணங்களிலும் **எழுப்புதல் உபவாச ஜெபங்கள்** நடத்தப்பட்டதின் மூலமாக சுமார் **1,00,000** பேர்கள் எழுப்புதல் தரிசனத்தையும், அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

### திருச்சபை மேய்ப்பர்கள் எழுப்புதல் தரிசன கூடுகைகள்!

திருச்சபை மேய்ப்பர்களுக்கென்று **தமிழ்நாட்டில்** (நாலுமாவடி)-**தேவனுடைய கூடாரம்**, **சேலம்**, **திருச்சி**, **பரமன்கேணி**, **ஊட்டி**, **சென்னை** ஆகிய இடங்களிலும், வெளி மாநிலங்களில் **ஐதராபாத்**, **விஜயவாடா**, **திருவனந்தபுரம்** ஆகிய பட்டணங்களிலும், **இலங்கை**யிலுள்ள **கண்டி**, **கொழும்பு** ஆகிய பட்டணங்களிலும் நடத்தப்பட்ட **எழுப்புதல் தரிசன கூடுகை**யின் மூலமாக, சுமார் **8,000**க்கும் அதிகமான திருச்சபை மேய்ப்பர்கள் எழுப்புதல் தரிசனத்தை பெற்றுக் கொண்டார்கள்.

### (நாலுமாவடி)-தேவனுடைய கூடார ஊழியங்கள்!

ஒவ்வொரு மாதமும் **கடைசி சனிக்** கிழமைதோறும் நடைபெற்ற **திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில்** சுமார் **40,000**க்கும் அதிகமான ஜனங்களும், **2வது சனி**க் கிழமைதோறும் நடைபெற்ற

**முழு இரவு ஜெபத்தில்** சுமார் **3,000** பேர்களும், **வியாழக் கிழமை**தோறும் நடைபெற்ற **அற்புத விடுதலைப் பிரார்த்தனை**யில் சுமார் **3,500** பேர்களும், **தினந்தோறும்** காலை மற்றும் மாலையில் நடைபெற்ற **சுகமளிக்கும் கூட்டத்தில்** சுமார் **2,72,153** பேர்களும், கடந்த 2025 ஜனவரி 1ம் தேதி நடைபெற்ற **புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டத்தில்** சுமார் 60,000 பேர்களும், **தீர்க்கதரிசன ஜெப முகாமில்** சுமார் **14,000** பேர்களும், மே மாதம் நடைபெற்ற **எழுப்புதல் பெருவிழா**க்களில் சுமார் **15,000** பேர்களும், **விடுதலை முகாமில்** சுமார் **15,000** பேர்களும், வியாபாரம் மற்றும் தொழில் செய்வோருக்கான **ஆசீர்வாத உபவாச ஜெபத்தில்** சுமார் 60,000 பேர்களும், **பெண்கள் எழுப்புதல் தரிசன கூடுகை**யில் சுமார் 1,600 பேர்களும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர்.

**24 மணி நேர–எழுப்புதல் ஜாமக்காரர்** ஜெபத்தில் சுமார் 55,669 பேர்கள் **நேரில் வந்து** தேசத்திற்காக ஜெபித்திருக்கிறார்கள். **24 மணி நேர–துதி ஆராதனை**யில் சுமார் **29,511** பேர்களும், **தினந்தோறும் 2 வேளை** நடைபெற்ற **துதி–ஆராதனை**யில் சுமார் 40,675 பேர்களும், **'ஆராதிப்போம் வாருங்கள்!' நேரலை** நிகழ்ச்சியில் சுமார் 31,92,681 பேர்களும் கலந்து கொண்டு கர்த்தரை ஆராதித்தார்கள்.

**மாதந்தோறும்** நடைபெற்ற **மாற்றுத் திறனாளிகள் கூட்டத்தில்** சுமார் **300** பேர்களும், **உத்தம விதவைகள் கூடுகை**யில் சுமார் **400** பேர்களும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**உலக எழுப்புதல் தரிசன மாநாட்டில்**, **17** வெளி தேசங்களை சார்ந்த **302 தேவ ஊழியர்கள்** கலந்து கொண்டு, எழுப்புதல் தரிசனத்தை பெற்றுக் கொண்டார்கள்.

மாதந்தோறும் **கடைசி வெள்ளிக்** கிழமையன்று நடைபெற்ற **எழுப்புதல் அபிஷேக ஜெபத்தில்** சுமார் **1,000** பேர்கள் கலந்து கொண்டு புதிய அபிஷேகத்தை பெற்றுக் கொண்டார்கள். மாதந்தோறும் **தூத்துக்குடி மாவட்ட பெந்தேகொஸ்தே திருச்சபை போதகர்கள்** நடத்திய **முழு இரவு ஜெபத்தில்** சுமார் **250** பேர்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

அனேகர் **வேத ஆராய்ச்சி கூடுகை**யில் கலந்து கொண்டு, வேதாகமத்தின் மகத்துவங்களை அறிந்து கொண்டார்கள். **திருமணத்திற்காக காத்திருப்போர் ஆலோசனை கூட்டத்தில்** சுமார் **325** பேர்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**குஜராத்**, **இராஜஸ்தான்**, **மத்தியப் பிரதேசம்** ஆகிய மாநிலங்களிலுள்ள **'பீல்' ஆதிவாசி இன மக்கள்** மத்தியில் ஊழியம் செய்து கொண்டிருக்கிற, **'ஷாலோம்'** ஊழியர்களுக்கென்று நடத்தப்பட்ட **எழுப்புதல் தரிசன முகாமில்**, சுமார் **1,500** தேவ ஊழியர்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## கிராம சுவிசேஷ ஊழியம்!

நமது **சுவிசேஷ ஊழியக் குழு**வினர் தமிழ்நாட்டிலுள்ள சுமார் **581 கிராமங்களில்** சுற்றி நடந்து, சுமார் **23,135** பேர்களுக்கு **சுவிசேஷம்** அறிவித்ததின் மூலமாக, **2,320** பேர்கள் **இயேசு கிறிஸ்துவை ஏற்று**க் கொண்டார்கள்.

## ஜெப குழுக்கள்!

கடந்த 2025ம் ஆண்டு மட்டும் **புதிதாக 2,130 தெபோராள் ஜெபக் குழு**க்கள் எழுப்பப்பட்டு, கடலோர மக்களுக்காக ஜெபிக்க **93 ஜெபக் குழு**க்களும், **229 எழுப்புதல் வீட்டு ஜெபக் குழு**க்களுமாக, இதுவரை மொத்தம் **17,144 ஜெபக் குழு**க்களில் உள்ள பெண்கள் தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

## இஸ்ரேல் எழுப்புதல் ஜெபத் திட்டம்!

கடந்த (2025) செப்டம்பர் மாதம் 176 பேர்கள் **எழுப்புதல் ஜெப சுற்றுலா**வாகவும், நவம்பர் மாதம் **82** பேர்கள் **7 நாட்கள்–உபவாச ஜெபத்திற்கா**கவும் **இஸ்ரேல்** தேசம் சென்று, அந்த தேசத்திற்காக ஜெபித்து வந்தோம். அந்த ஜெபத்தின் விளைவாக அங்கு யுத்தம் ஓய்ந்தது! சுமார் **510 ஜெப குழு**வினர் இஸ்ரேல் தேசத்திற்காக ஜெபித்து வருகிறார்கள்.

## வெளி தேசங்களில் எழுப்புதல் ஊழியங்கள்!

**மலேசியா**, **இங்கிலாந்து**, **அமெரிக்கா**, **பிரேசில்**, **இலங்கை**, **மியான்மர்**, **ஓமான்** ஆகிய வெளி



தேசங்களுக்கு கடந்து சென்று, **எழுப்புதல் கூட்டங்களை**யும், **அற்புத சுகமளிக்கும் கூட்டங்களை**யும் நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.

### யுத்த ஜெபங்கள்!

**தமிழ்நாட்டில்** பல மாவட்டங்களிலும், **கேரளா** மற்றும் **ஆந்திர** மாநிலங்களை சார்ந்த பல பகுதிகளிலும் **யுத்த ஜெபங்களை** செய்து, சகல அசுத்த ஆவிகளின் கிரியைகளும் அழிக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார்.

## உலக எழுப்புதல் ஜெப மையங்கள்!

**தமிழ்நாட்டில்** 56 இடங்களிலும், **வெளி மாநிலங்களில் 19** இடங்களிலும், **வெளி தேசங்களில் 11** இடங்களிலுமாக மொத்தம் 86 **இடங்களில்** செயல்பட்டு வருகிற, 'இயேசு விடுவிக்கிறார்'–**உலக எழுப்புதல் ஜெப மையங்களில்** சுமார் **4,38,170** பேர்கள் **நேரடியாக** வந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அவர்களில் சுமார் **19,000** பேர்கள் **புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்று**க் கொண்டார்கள்.

ஜெப மையங்கள் மற்றும் அதை சுற்றியுள்ள **78** இடங்களில் **மாதந்தோறும்** நடைபெற்ற **திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில்** சுமார் **74,000**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**ஒவ்வொரு வாரமும்** நடைபெற்ற **அற்புத விடுதலைப் பிரார்த்தனை**யில் சுமார் **98,000** பேர்கள் கலந்து கொண்டு **விடுதலை** மற்றும் **சுகத்தை** பெற்றுக் கொண்டனர். நடைபெற்ற எல்லா **எழுப்புதல் உபவாச ஜெப**ங்களிலுமாக சுமார் **1,02,000** பேர்கள் கலந்து கொண்டு, தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

நடைபெற்ற **குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில்** சுமார் **44,000** பேர்களும், **வியாபாரிகள் ஆசீர்வாத கூடுகை**யில் சுமார் 6,000 பேர்களும் கலந்து கொண்டு, தேவ **சமாதானத்தை**யும், **வழி நடத்துதலை**யும் பெற்றுக் கொண்டனர்.

**திருச்சபைகளுக்கான ஜெபம்**, **தேவ ஊழியர்களுக்கான ஜெபம்** மற்றும் **இஸ்ரேல் தேசத்திற்கான ஜெபம்** உட்பட, நடைபெற்ற **27 வகையான ஜெபங்களில்** கலந்து கொண்டவர்கள் மூலமாக சுமார் **9,39,040:00 மணி நேரம்** தேசத்தின் **எழுப்புதலுக்காக ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது.

சிறப்புக் கூடுகைகளாக, **சிறு பிள்ளைகள் கூடுகை, வாலிபர்கள் கூடுகை, பெண்கள் கூடுகை, காவல்துறையினர் கூடுகை, செவிலியர்கள் கூடுகை, துதி–ஆராதனை** ஆகிய கூடுகைகள் நடைபெற்றது.

இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு **கிராமங்கள்** மற்றும் **மாநகரங்களிலுமாக** சுமார் 50,16,184 பேர்களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது. அவர்களில் சுமார் **1,19,514** பேர்கள் **இயேசு கிறிஸ்துவை ஏற்று**க் கொண்டனர். சுமார் **178** பேர்கள் **ஞானஸ்நானம்** பெற்றனர்.

## மிஷனெரி ஊழியம்!

**இந்தியா** (23 மாநிலங்கள்) மற்றும் **இலங்கை** தேசத்திலுள்ள **80** மிஷனெரி ஸ்தாபனங்களோடு இணைந்து, இதுவரை 1,396 **மிஷனெரி**களையும், **480 ஆதிவாசி குழந்தை**களையும் தாங்குவதற்கு கர்த்தர் உதவி செய்தார். இந்த மிஷனெரிகள் மூலமாக சுமார் 13,80,653 பேர்களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டதில், சுமார் **92,412** பேர்கள் **இயேசு கிறிஸ்துவை ஏற்று**க் கொண்டுள்ளனர்.

வட மாநில மிஷனெரிகள் ஊழியத்தில் பயன்படுத்த **3** Projectorகள், Speakerகள், Micகள், Sound System, **2** Laptopகள், **2** Vanகள், **4** Bikeகள், 61 Cycleகள் மற்றும் **100** பரிசுத்த **வேதாகமங்கள்** வாங்கிக் கொடுத்ததோடு, அவர்களுக்கு **மருத்துவ உதவி**களும் செய்து கொடுக்கப்பட்டது.

கடந்த 2025ம் வருடத்தில் மட்டும் **21 தேவாலயங்கள்** கட்டிக் கொடுக்கப்பட்டு, இதுவரை **மொத்தம்** 626 **தேவாலயங்கள்** கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**பிஹார்** மாநிலத்தில் செயல்பட்டு வருகிற GEMS மிஷனெரி ஊழியத்திற்கு, Solar System மூலம் **மின்சார வசதி**கள் செய்து கொடுக்கப்பட்டது.

## ஜெப மலை ஊழியங்கள்!

ஜெப மலைக்கு தனி நபராக, குழுவாக, குடும்பமாக, திருச்சபையினராக சுமார் 1,68,846 பேர்கள் **நேரடியாக** வந்து, தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள். இங்குள்ள **ஆலோசனை ஜெப மையத்திற்கு நேரடியாக** வந்த சுமார் **24,514** பேர்கள் விடுதலை மற்றும் சுகத்தை பெற்றுக் கொண்டார்கள். **தொலைபேசி**யின் மூலமாக தொடர்பு கொண்ட சுமார் 11,567 பேர்களுக்கு ஜெபித்து, **ஆலோசனை** வழங்கப்பட்டது.

**தினந்தோறும் பகல்** மற்றும் **இரவு** நேரங்களில் நடைபெற்ற **ஜாமக்காரன்** ஜெபத்தில் சுமார் 21,346 பேர்கள் கலந்து கொண்டு எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

**முதல் சனி**க் கிழமைதோறும் நடைபெற்ற **முழு இரவு ஜெபத்தில்** கலந்து கொண்ட சுமார் 13,516 பேர்களும், **கடைசி சனிக்கிழமைக்கு முந்தின வியாழக் கிழமைகளில்** நடைபெற்ற **திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில்** கலந்து கொண்ட சுமார் 25,680 பேர்களும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

**வியாழன்தோறும்** நடைபெற்ற **அற்புத விடுதலைப் பிரார்த்தனை**யில் கலந்து கொண்ட சுமார் 12,036 பேர்கள் விடுதலை மற்றும் சுகத்தை பெற்றுக் கொண்டார்கள்.

**புதன்** கிழமைதோறும் நடைபெறுகிற **காவல்காரன்** ஜெபத்தில் கலந்து கொண்ட சுமார் **1,423** பேர்களும், **ஜெப சேனை**யில் உள்ள சுமார் **859** பேர்களும் நமது சகோதரர் அவர்களுக்காக ஜெபித்தார்கள். **தன்னார்வ ஊழியர்**களுக்கான **உபவாச ஜெபத்தில்** சுமார் 625 பேர்கள் கலந்து கொண்டு ஜெபித்தார்கள்.

**வெள்ளி**க்கிழமை மற்றும் **3வது சனி**க் கிழமைதோறும் கிராமங்களுக்கு சென்று சுமார் **22,204** பேர்களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது.

**வெள்ளி**க் கிழமைதோறும் நடைபெறுகிற **எழுப்புதல் பெண்கள் ஜெபத்தில்** சுமார் **2,559** பெண்களும், சிறு பிள்ளைகளுக்கான **எழுப்புதல் ஜெபக் கூடுகை**யில் கலந்து கொண்ட சுமார் 658 சிறு பிள்ளைகளும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

**செவ்வாய்** மற்றும் **வியாழன்**தோறும் நடைபெறுகிற **துதி–ஆராதனை**யில் சுமார் **1,393** பேர்கள் கலந்து கொண்டு கர்த்தரை ஆராதித்தார்கள். **செவ்வாய்** கிழமைதோறும் நடைபெற்ற **தீர்க்கதரிசன ஜெபத்தில்** கலந்து கொண்ட சுமார் 645 பேர்கள் ஊழியங்களுக்காகவும், தேசத்திற்காகவும் ஜெபித்தார்கள்.

**3வது ஞாயிறு**தோறும் நடைபெற்ற **சிறு பிள்ளை**களுக்கான, **'ABLAZE' கூடுகை**யில் கலந்து கொண்ட சுமார் **975** சிறு பிள்ளைகளும், **வாலிபர்**களுக்கான **'IGNITERS' கூடுகை**யில் கலந்து கொண்ட சுமார் 651 வாலிபர்களும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

**தேர்வு எழுதும் மாணவர்**களுக்கான **'ACHIEVERS'**, **சிறு பிள்ளை**களுக்கான **REVIVAL ABLAZERS முகாம்**, **வாலிபர்**களுக்கான **மவுண்ட் சீனாய்** கூடுகை, பெண்களுக்கான **எழுப்புதல் முகாம்**, உலக மகளிர் தினத்தன்று **பெண்கள் சுய உதவிக் குழு**வினருக்கான கூடுகை மற்றும் பண்டிகை காலத்தில் ஏழை–எளியவர்களுக்கு உதவி செய்வதற்கான **கிறிஸ்துமஸ் விழா** நடத்தப்பட்டது.

**பிற ஊழிய ஸ்தாபனங்கள்** மற்றும் **திருச்சபைகள்** மூலமாக நடத்தப்பட்ட **133 முகாம்**களில் சுமார் **22,238** பேர்கள் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். தங்கியிருந்து ஜெபிப்பதற்காக கட்டப்பட்டுள்ள **எஸ்தர்** மையத்தில் சுமார் **10,322** பேர்களும், **A/C கன்டெய்னர் அறை**களில் சுமார் **951** பேர்களும் தங்கியிருந்து தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

இங்குள்ள **மன்றாட்டு ஜெப கோபுரத்தில்** சுமார் 56,974 பேர்களும், தமிழ்நாடு மற்றும் இந்தியாவிற்கான **ஜெப நடை தோட்டத்தில்** சுமார் 50,263 பேர்களும், இங்குள்ள **30 தனி ஜெப அறை**களில் சுமார் 68,170 பேர்களும், **தியானத் தோட்டத்தில்** சுமார் 40,562 பேர்களும், **சந்தியா ஜெப மைதானத்தில்** சுமார் **43,538** பேர்களும், **சிலுவை தியான மண்டபம்** பகுதியில் சுமார் 47,065 பேர்களும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.



**அற்புத சுகம் ஜெப கோபுரத்தில்** சுமார் **50,070** பேர்கள் தாங்களாகவே ஜெபித்து, அற்புதங்களை பெற்றுச் சென்றுள்ளார்கள்.

இங்கு செயல்பட்டு வருகிற **BIBLE WORLD** மூலமாக சுமார் **12,158** ஆவிக்குரிய **புத்தகங்களும்**, சுமார் 3,647 **பரிசுத்த வேதாகமங்களும்** வினியோகிக்கப்பட்டது.

கடன் பிரச்சனைகளில் சிக்கித் தவிக்கிற ஜனங்களை மீட்பதற்காக, சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக **200 சுய உதவிக் குழு**க்கள் செயல்பட்டு வந்த நிலையில், **புதிதாக 50 சுய உதவி குழு**க்கள் ஆரம்பிக்கப்பட்டது. 'பீடி' சுற்றி பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த சுமார் 186 ஏழை பெண்களுக்கு **தையல் பயிற்சி**யளித்து, மாற்றுத் தொழிலுக்கு வழி செய்து கொடுக்கப்பட்டது. **11** கிராமங்களில் **நற்செய்திக் கூடுகை** நடத்தப்பட்டதின் மூலமாக சுமார் **1,120** பேர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். **8 கிராமங்களில்** நடத்தப்பட்ட **மருத்துவ முகாம்** மூலமாக சுமார் **1,270** பேர்கள் பயனடைந்தனர்.

**2வது சனி**க் கிழமைதோறும் நடைபெற்ற **மாற்றுத் திறனாளி**களுக்கான **கூடுகை**யில் கலந்து கொண்ட சுமார் **1,425** பேர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மட்டுமல்ல, **புதிதாக 2வது செவ்வாய்** கிழமைதோறும் நடத்தப்பட்ட **முதியோர் கூடுகை**யில் கலந்து கொண்ட சுமார் **837 முதியவர்**களும், **3வது செவ்வாய்** கிழமைதோறும் நடத்தப்பட்ட **உத்தம விதவைகள் கூடுகை**யில் கலந்து கொண்ட **885** பேர்களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## சிறுவர் ஊழியங்கள்!

### சிறுவர் எழுப்புதல் முகாம்!

**தமிழ்நாட்டில்** 16 இடங்களில் நடத்தப்பட்ட **சிறுவர் எழுப்புதல் முகாம்** மூலமாக சுமார் **15,000**க்கும் அதிகமான சிறு பிள்ளைகளுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது.

### 'ABLAZE' FELLOWSHIP!

நமது உலக எழுப்புதல் ஜெப மையத்தில் (37 இடங்களில்) வைத்து நடத்தப்பட்ட ABLAZE' FELLOWSHIP **கூடுகை**யில், ஒவ்வொரு மாதமும் சுமார் **2,000** சிறு பிள்ளைகள் கலந்து கொண்டு எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

### SPARKERS TRAINING!

**தமிழ்நாட்டில்** சுமார் **25** இடங்களில் நடத்தப்பட்ட SPARKERS TRAINING மூலமாக **1,200** **சிறுவர் ஊழியர்**களுக்கு **பயிற்சி** கொடுக்கப்பட்டு, சுமார் 16,000 சிறு பிள்ளைகளுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது.

### PARENTS PRAYER!

உலக எழுப்புதல் ஜெப மையத்தில் **பெற்றோர்**களுக்கென்று நடத்தப்பட்ட PARENTS PRAYERல் கலந்து கொண்ட சுமார் **1,000** பெற்றோர்களுக்கு, 'பிள்ளைகளை வளர்ப்பது எப்படி? அவர்களுக்காக எப்படி ஜெபிக்க வேண்டும்?' என்பதை குறித்த **ஆலோசனை**கள் வழங்கப்பட்டது.

### பள்ளி மற்றும் கிராம ஊழியம்!

தமிழ்நாட்டில் **17** கிராமங்களை சார்ந்த சுமார் **1,031** சிறு பிள்ளைகளுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது. அதில் **100** சிறு பிள்ளைகள் **இரட்சிக்கப்பட்டனர்**. மட்டுமல்ல, **246 பள்ளி**களிலுள்ள சுமார் **15,000** சிறு பிள்ளைகளுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது.



### ஜெப குழுக்கள்!

சுமார் **10,000**க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் **ஜெப குழு**க்களாக கூடி எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

### MEDIA ஊழியங்கள்!

Sathiyam TVயில் **ஞாயிறு**தோறும் **மதியம் 1:30–2:00** மணிவரை **தமிழ்** மற்றும் **ஆங்கிலத்தில்** '**ஜாலி டைம்**' நிகழ்ச்சியும், மாதத்தின் **கடைசி ஞாயிறு மதியம் 1:30–2:30** மணிவரை, 'ABLAZE KIDS FELLOWSHIP' ஆகிய நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்பட்டது. **தமிழ்**, **ஆங்கிலம்**, **கன்னடம்** ஆகிய மொழிகளில் VBS நிகழ்ச்சியும், Youtube Channelல் Jolly Kids என்கிற **சிறுவர் நிகழ்ச்சி**யும் ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் மூலமாக சுமார் **1,50,000**க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

### 'சிறுவர் ஜெப மலர்'–பத்திரிக்கை!

சிறு பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்வதற்கு ஏதுவாக, '**சிறுவர் ஜெப மலர்**' என்கிற பத்திரிக்கை **தமிழ்**, **ஆங்கிலம்**, **இந்தி**, **கன்னடம்** மற்றும் **தெலுங்கு** ஆகிய **5 மொழி**களில் **மாதந்தோறும்** சுமார் 15,000க்கும் அதிகமான சிறு பிள்ளைகளுக்கு, அனுப்பப்பட்டது. மட்டுமல்ல, இப்பத்திரிக்கையை **மலையாள** மொழியில் மொழி பெயர்ப்பு செய்து, kids.jesusredeems.com என்கிற Websiteல் Upload செய்யப்பட்டது.

## வாலிபர் ஊழியங்கள்!

### 8 கோடி ஆத்தும ஆதாயம்!

'**10** ஆண்டுகளில் **8 கோடி வாலிபர்**களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்க வேண்டும்! **80 லட்சம்** வாலிபர்களை கர்த்தருக்கென்று **சேனை**யாக எழுப்ப வேண்டும்! அதற்காக, **80 லட்சம் மணி நேரம் ஜெபிக்க வேண்டும்!**' என்ற வாலிபர் ஊழியத்தினுடைய தரிசனத்தின் அடிப்படையில் சுமார் **4,43,299** பேர்களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது. அதன் மூலமாக சுமார் **5,912 வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்று**க் கொண்டார்கள். சுமார் **5,31,145:00 மணி நேரம் ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது.

### தேர்வு எழுதும் மாணவர்களுக்கான ஜெபக் கூடுகை! (ACHIEVERS)

**தேர்வு எழுதும் மாணவர்களுக்கான** 'ACHIEVERS' ஜெபக் கூடுகை, **தமிழ்நாடு**, **மகாராஷ்டிரா** மற்றும் **ஆந்திரா** ஆகிய மாநிலங்களிலுமாக **15** இடங்களில் நடைபெற்ற இக்கூடுகையில் சுமார் **7,487**க்கும் அதிகமான மாணவ, மாணவியர் கலந்து கொண்டார்கள்.

தேர்வை குறித்த பயத்தோடு, நம்பிக்கை இழந்து போன நிலைமையில் இக்கூடுகையில் கலந்து கொண்டவர்களுக்கு **தேர்வை குறித்த** மற்றும் சரீர **ஆரோக்கியத்திற்கான மருத்துவ ஆலோசனை**கள் வழங்கப்பட்டது.

**பள்ளிகள்** மற்றும் **கல்லூரிகளில்...**

**ஆந்திரா**, **கர்நாடகா** மற்றும் **தமிழ்நாடு** ஆகிய மாநிலங்களிலுள்ள **28 பள்ளி**கள் மற்றும் **கல்லூரி**களுக்கு கடந்து சென்று சுமார் 19,696க்கும் அதிகமான மாணவ, மாணவியருக்கு **சுவிசேஷம்** அறிவித்து, கல்வியில் பின்தங்கிய மாணவர்களை **ஊக்கப்படுத்தி**, கல்வியின் அவசியத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**வாலிபர் எழுப்புதல் பெருவிழா!**

கடந்த (2025) **மே 3-10**ம் தேதிவரை, நாலுமாவடி-தேவனுடைய கூடாரத்தில் **7 நாட்கள்** நடைபெற்ற **50 பெருவிழா**க்களில், அந்த **7 நாட்களும்** வாலிபர்களுக்கென்று தனியாக நடத்தப்பட்ட **வாலிபர் எழுப்புதல் பெருவிழா**வில், சுமார் **4,143** வாலிப சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.



இதில் சுமார் **242** பேர்கள் **புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்று**க் கொண்டனர். சுமார் **240** பேர்கள் **அபிஷேகத்தை** பெற்றுக் கொண்டனர். **பாவ கட்டு**களோடும், தீராத **பிரச்சனை**களோடும் வந்திருந்த **518** பேர்களுக்கு தேவ **ஆலோசனை**கள் வழங்கி ஜெபித்தபோது, **விடுதலை**யை பெற்றுக் கொண்டார்கள்.

**வாலிபர் எழுப்புதல் கூடுகை!**

கிராமங்கள், தாலுகாக்கள், மாவட்டங்கள்தோறும் நடத்தப்பட்ட **வாலிபர் எழுப்புதல் கூடுகை**களில், சுமார் 6,339க்கும் அதிகமான வாலிப சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டு, ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

**மாதாந்திர வாலிபர் கூடுகை! (IGNITERS FELLOWSHIP)**

**தமிழ்நாட்டில்** 36 இடங்களிலும், **மகாராஷ்டிரா**, **ஆந்திரா**, **கர்நாடகா** ஆகிய மாநிலங்களில் **5** இடங்களிலுமாக **ஒவ்வொரு மாதமும்** நடைபெற்ற **மாதாந்திர வாலிபர் கூடுகை**யில் கலந்து கொண்ட சுமார் **1,575**க்கும் அதிகமான வாலிப சகோதர, சகோதரிகள் தங்களுடைய கிராமங்களுக்கு சென்று, ஆத்துமாக்களை **இரட்சிப்பு**க்குள் வழி நடத்தினார்கள்.

**மவுண்ட் சீனாய்!** (ஒருநாள்-வாலிபர் உபவாச கூடுகை)

கடந்த (2025) அக். 20ம் தேதி **தீபாவளி** தினத்தன்று, **தமிழ்நாடு**, **கர்நாடகா**, **கேரளா**, **ஆந்திரா**, **பாண்டிச்சேரி** மற்றும் **மகாராஷ்டிரா** ஆகிய மாநிலங்களிலுமாக, **33** இடங்களில் வாலிபர்களுக்கென்று நடத்தப்பட்ட **மவுண்ட் சீனாய்** ஜெபக் கூடுகையில் சுமார் **6,500**க்கும் அதிகமான வாலிப சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டு, தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள்.

**'வாலிபர் உலகம்!' பத்திரிக்கை!**

**வாலிபர்களுக்கென்று** மாதந்தோறும் **தமிழ்**, **ஆங்கிலம்**, **இந்தி** மற்றும் **மலையாளம்** ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிற **'வாலிபர் உலகம்!' பத்திரிக்கை**யின் மூலமாக சுமார் **20,000**க்கும் அதிகமான வாலிப சகோதர, சகோதரிகள் ஆசீர்வதிக்கப்பட்டனர். மாதந்தோறும் சுமார் **1,000**க்கும் அதிகமானோர் **கன்னடம்**, **தெலுங்கு** மற்றும் **பெங்காளி** ஆகிய மொழிகளில் இப்பத்திரிக்கையை Websiteல் Download செய்து பயனடைந்தனர்.

**'வாலிபர் உலகம்!' – தொலைக்காட்சி ஊழியம்!**

**சனி**க் கிழமைதோறும் **காலை** 6:30 மணிக்கு **சத்தியம் டி.வி**யிலும், **காலை 7:00** மணிக்கு 'இயேசு விடுவிக்கிறார்'-**சமூக வலைத் தளங்களிலும்** ஒளிபரப்பப்பட்ட 'வாலிபர் உலகம்!'-**தொலைக்காட்சி நிகழ்ச்சி**களில், **சாட்சிகள்**, **குறும் படங்கள்**, **பாடல்கள்**, **'கனவுப் பாதை!'**, **'உண்மையை தெரிந்து கொள்!'**, நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் **'சிறப்பு தேவ செய்தி!'** போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் **புதிதாக** ஒளிபரப்பப்பட்ட **'ஆராதனையும்-அனுபவமும்!'**, **'வாதம்-விவாதம்!'**, 'TALK SHOW!' மற்றும் **'எழுப்புதல் சுவடுகள்!'** போன்ற நிகழ்ச்சிகள் மூலமாக சுமார் **11,18,231**க்கும் அதிகமானோர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

'இயேசு விடுவிக்கிறார்'-சமூக வலைத் தளங்களில், மாதத்தின் **கடைசி ஞாயிறு மாலை 3:00-5:00** மணிவரை **தமிழிலும்**, **5வது ஞாயிறு மாலை 3:00-5:00** மணிவரை **கன்னடம்** மற்றும் **இந்தி** மொழியிலும் ஒளிபரப்பப்பட்ட REVIVAL IGNITERS **நேரலை** நிகழ்ச்சியின் மூலமாக சுமார் **1,000**க்கும் அதிகமான வாலிப சகோதர, சகோதரிகள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## தொலைக்காட்சி ஊழியம்!

தொலைக்காட்சி ஊழியத்தின் மூலமாக சுமார் **4,400 நிகழ்ச்சிகள்** தயாரிக்கப்பட்டு, 16 டி.வி., சேனல்கள் வழியாக **தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், பஞ்சாபி** மற்றும் **குஜராத்தி** ஆகிய **7 மொழிகளில்** ஒளிபரப்பப்பட்டதின் விளைவாக சுமார் **12,80,000** பேர்கள் ஜெபத்திற்காக தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள்.

மேலும், **'ஜெபிக்கலாம் வாங்க!', 'அற்புதப் பெருவிழா!', 'இனிய இல்லறம்!', 'உங்கள் அற்புதத்தின் நேரம்!', 'குடும்ப ஆசீர்வாத நேரம்!', 'வாலிபர் உலகம்!', 'ஜாலி டைம்!', 'விடுதலையின் செய்தி!', 'தேற்றரவாளன்!', 'எழுப்புதல் அக்கினி!', 'உங்களுக்கான இன்றைய தேவ வார்த்தை!', 'ஜெயம் பெற்றவர்கள்!', 'குறும் படங்கள்!', 'ஆவணப் படங்கள்!'** மற்றும் **'234 சாட்சிகள்!', '92 குறு நாடகங்கள்!', '7 சிறப்பு பாடல்கள்!'**, 'ABLAZE!', 'VBS!' போன்ற நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்ப கர்த்தர் கிருபை செய்தார்.

கடந்த வருடத்தில் 980 முறை நடைபெற்ற நிகழ்ச்சி **தயாரிப்பு பணிகளிலும், பிரயாணங்களிலும்** தேவ **பாதுகாப்பு** இருந்தது. இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலமாக உலகமெங்குமுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

### EVANGEL OTT

அனேக கிறிஸ்தவ ஊழியங்கள் ஒன்றிணைந்து, சுமார் **150**க்கும் அதிகமான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு EVANGEL OTT மூலமாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. **புதிதாக 14 கிறிஸ்தவ டி.வி., சேனல்**கள் EVANGEL OTTயில் சேர்க்கப்பட்டு, **மொத்தம் 29 கிறிஸ்தவ டி.வி., சேனல்**களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதன் மூலமாக, சுமார் **87,000 சந்தாதாரர்கள்** பயனடைந்தார்கள்.



### சமூக வலைத் தளங்கள்! (SOCIAL MEDIA)

**தினந்தோறும் 10 மொழி**களில் **வாக்குத்தத்த வசனங்கள், 15 மொழி**களில் WALK WITH JESUS, 6 **மொழி**களில் **தினசரி** தொலைக்காட்சி **நிகழ்ச்சி**கள் மற்றும் நமது **ஊழியத்தின் தகவல்கள்** என, YouTube, Facebook, Instagram, Twitter, Telegram, WhatsApp போன்ற சமூக வலைத் தளங்கள் மூலமாக உலகமெங்குமுள்ள மக்களுக்கு பகிர்ந்து கொள்ளப்பட்டது.

**வெளி நாட்டவர்களுக்கு** அனைத்து நிகழ்ச்சிகளும் **ஆங்கிலத்தில்** மொழி பெயர்ப்பு செய்து, Subtitles (CC) மூலமாக Upload செய்யப்பட்டதின் மூலமாக சுமார் 68,00,000க்கும் அதிகமானோர் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் பாடல்கள் MP3 வடிவில் iTunes, Spotify, Amazon Music, Jio Music, Youtube Music போன்ற Audio வலைத் தளங்களில் UPLOAD செய்யப்பட்டதின் மூலமாக அனேகர் பயனடைந்தனர்.

### நேரலை ஜெபங்கள்!

வாரந்தோறும் **'ஜெபிக்கலாம் வாங்க!', 'ஆராதிப்போம் வாருங்கள்!', தமிழ்** மற்றும் **இந்தி** மொழியில் **'ஆசீர்வாத உபவாச ஜெபம்!', 'அற்புத விடுதலைப் பிரார்த்தனை!'** மற்றும் **மாதந்தோறும் 'அற்புதப் பெருவிழா!'**, வியாபாரிகளுக்கான **'ஆசீர்வாத உபவாச ஜெபம்!'** ஆகிய நிகழ்ச்சிகளை **சத்தியம்** TV, COMFORTER DIGITAL CHANNEL மற்றும் நமது **சமூக வலைத் தளங்களில் நேரலை**யாக ஒளிபரப்பப்பட்டது.

**கடைசி ஞாயிறு**தோறும் ஒளிபரப்பப்பட்ட **சிறு பிள்ளை**களுக்கான 'ABLAZE', வாலிபர்களுக்கான 'REVIVAL IGNITERS' போன்ற **நேரலை** நிகழ்ச்சிகளின் மூலமாக பல்லாயிரக்கணக்கான சிறு பிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்கள் கர்த்தருடைய எழுப்புதல் பணியில் செயலாற்றுவதற்காக தங்களை அர்ப்பணித்தார்கள்.

### அனுதின காலை செய்தி! (WALK WITH JESUS!)

நமது COMFORTER DIGITAL CHANNEL மற்றும் **சமூக வலைத் தளங்கள்** மூலமாக 'WALK WITH JESUS!' நிகழ்ச்சி **ஜெர்மன், பிரெஞ்சு** மொழிகள் உட்பட, **15 மொழி**களில் UPLOAD செய்யப்பட்டதின் மூலமாக, தினமும் சுமார் **5,00,000**க்கும் அதிகமான மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

### COMFORTER DIGITAL CHANNEL & COMFORTER RADIO!

**தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு** ஆகிய **4 மொழி**களில் சிறப்பு நிகழ்ச்சிகளை தயாரித்து, COMFORTER DIGITAL CHANNEL மூலமாக **24 மணி நேரமும்** ஒளிபரப்பு செய்யப்பட்டதின் நிமித்தமாக **இந்தியா** உட்பட, **86 வெளி நாடு**களில் வசிக்கிற சுமார் **4,50,000**க்கும் அதிகமானோர் பயனடைந்தார்கள்.

**தினந்தோறும் மாலை** 6:00-7:00 மணிவரை ஒளிபரப்பு செய்யப்பட்ட **சிறப்பு நேரலை நிகழ்ச்சி**, வியாழக்கிழமை-**அற்புத விடுதலைப் பிரார்த்தனை** மற்றும் **கடைசி சனி**க்கிழமை நடைபெறுகிற **திறப்பின் வாசல் ஜெபத்தின்** மூலமாக உலகமெங்கும் இருக்கிற பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் மாதந்தோறும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மாதந்தோறும் **தமிழ்** மற்றும் **கன்னட** மொழிகளில் COMFORTER RADIO மூலமாக பல சிறப்பு நிகழ்ச்சிகள் **நேரலை ஒலிபரப்பு** செய்யப்பட்டதின் மூலமாக, 66 **வெளி நாடு**களில் வசிக்கிற சுமார் **3,50,000**க்கும் அதிகமானோர் பயனடைந்தார்கள்.

## இலக்கிய ஊழியம்!

**தமிழ்**, **ஆங்கிலம்**, **கன்னடம்**, **இந்தி**, **மலையாளம்**, **தெலுங்கு** உட்பட, 6 **மொழிகளில்** சுமார் 50,061 **பரிசுத்த வேதாகமங்கள்** மற்றும் **விளக்க உரைகள்**, சுமார் **1,52,791** ஆவிக்குரிய **புத்தகங்கள்**, **தமிழ்**, **ஆங்கிலம்**, **கன்னடம்** ஆகிய **3 மொழி**களில் வாக்குத்தத்தங்கள் அடங்கிய **காலண்டர்கள்**, ஜெப குறிப்புகள் மற்றும் தேவ ஆலோசனைகள் அடங்கிய **டைரிகள்**, வேத வசனங்கள் பொறிக்கப்பட்ட **போர்டுகள்**, **கீ-செயின்கள்**, **கடிகாரங்கள்** மற்றும் **ஸ்டிக்கர்கள்** என, சுமார் **2,30,144 பரிசுப்** பொருட்கள் 'இயேசு விடுவிக்கிறார்'-புத்தக நிலையத்தின் மூலமாகவும், 'jrbibleworld.in', 'Amazon', 'Flipkart' ஆகிய இணைய தளங்கள் மூலமாகவும் வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு** மற்றும் கர்நாடகா மாநிலம்-**பெங்களூரு**வில் நடைபெற்ற **அற்புதப் பெருவிழா** மற்றும் **எழுப்புதல் உபவாச ஜெப**ங்களில் **புத்தக நிலையம்** அமைத்து, அனேக ஆவிக்குரிய **புத்தகங்களும்**, **பரிசுத்த வேதாகமங்களும்** வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

**புதிய வெளியீடு**களாக, **தமிழில்** '**கேள்வி-பதில்!**' (பாகம்-2), '**எஸ்தரே, எழும்பு!**', '**எழுப்புதல் கால ஜெபங்கள்!**' மற்றும் **கன்னட** மொழியில், '**இயேசுவோடு நடப்பது எப்படி?**', '**தேசத்திற்காக திறப்பிலே நிற்க தேவன் தேடும் மனிதன்!**' ஆகிய புத்தகங்களை வெளியிடவும் கர்த்தர் கிருபை செய்தார். மட்டுமல்ல, Kindle மூலமாக **தமிழில் 4 புத்தகங்களும்**, **ஆங்கிலத்தில் 2 புத்தகங்களும்** வெளியிடப்பட்டது.

## தகவல் மற்றும் தொழில் நுட்பத் துறை ஊழியம்!

'**இயேசு விடுவிக்கிறார்**' இணைய தளத்தை, சுமார் **4,25,822** பேர்கள் பார்த்து பயனடைந்தார்கள். சுமார் 61,981 பேர்கள் **ஜெப குறிப்பு**களை **அனுப்பி** ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டார்கள்.

**இந்தியா** உட்பட, சுமார் **147 வெளி தேசங்களில்** வசிக்கிற அனேக தேவ பிள்ளைகள் Online மூலமாக 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தை குறித்த அனைத்து விபரங்களையும் அறிந்து கொண்டார்கள். '**இயேசு விடுவிக்கிறார்**'-E-Magazine மூலமாக, சுமார் 12,163 பேர்களும், '**வாலிபர் உலகம்**'-E-Magazine மூலமாக, சுமார் 34,648 **வாலிபர்**களும், '**சிறுவர் ஜெப மலர்**'-E-Magazine மூலமாக, சுமார் **1,254 சிறு பிள்ளை**களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

'www.jrbibleworld.com' (International) மற்றும் 'jrbibleworld.in' (India) என்கிற இணைய தளங்கள் மூலமாக சுமார் **17,810** பேர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## தகவல் தொடர்பு துறைகள்!

### கடித ஊழியம்!

**கடிதங்கள்** மற்றும் **ஜெப விண்ணப்பங்கள்** மூலமாக சுமார் 1,79,575 பேர்கள் ஜெபத்திற்காக தொடர்பு கொண்டார்கள். மாதந்தோறும் நடைபெற்ற **திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தின்** மூலமாக **தமிழ்**, **ஆங்கிலம்**, **மலையாளம்**, **கன்னடம்**, **இந்தி** மற்றும் **தெலுங்கு** மொழி பேசும் மக்களில் சுமார் **1,00,040** பேர்கள் ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்து, ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டனர். நமது **உலக எழுப்புதல் ஜெப மையங்கள்** மூலமாக சுமார் **14,281** பேர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

### மின்னியல் (DIGITAL) தொடர்பு துறை!

Email மூலமாக சுமார் **1,37,078** பேர்களும், WhatsApp மூலமாக சுமார் **2,59,789** பேர்களும் தங்களுடைய ஜெப விண்ணப்பங்களை தெரியப்படுத்தி ஜெபிக்க கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு ஜெபித்து, ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

### ஊழியப் பங்காளர் துறை!

**குடும்ப ஆசீர்வாத ஜெப திட்டத்தில்** இணைந்துள்ள சுமார் 86,968 **குடும்பங்களுக்காக**வும், '**இயேசுவின் கண்மணிகள்!**'-ஜெப திட்டத்தில் இணைந்துள்ள சுமார் **29,302 சிறு பிள்ளை**களுக்காகவும், '**இயேசுவின் சிநேகிதன்!**'-ஜெப திட்டத்தில் இணைந்துள்ள சுமார் 26,800 **வாலிபர்**களுக்காகவும், **வியாபாரிகள் ஆசீர்வாத ஜெப திட்டத்தில்** இணைந்துள்ள வியாபாரம் மற்றும் தொழில் செய்கிற சுமார் **47,910** பேர்களுக்காகவும், '**கர்ப்பத்தின் கனி**'-**ஆசீர்வாத ஜெப திட்டத்தில்** இணைந்துள்ள சுமார் 8,466 **தம்பதியினருக்காக**வும் **தினந்தோறும் ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது.

தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்கிற சுமார் **11,710 எழுப்புதல் வீட்டு ஜெப குழு**க்களுக்கு ஜெப குறிப்புகள் அடங்கிய, '**பின்மாரி மலர்!**' என்கிற **மாத**

**இதழ்** மாதந்தோறும் அனுப்பப்பட்டது. **உலக எழுப்புதல் ஜெப திட்டத்தில்** இணைந்துள்ள சுமார் **22,530** ஜெப வீரர்கள் மூலமாக **எழுப்புதலுக்கான ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது.

## தொலைபேசி ஊழியம்!

**குடும்ப பிரச்சனை, பிள்ளைகளின் படிப்பில், தொழில்** மற்றும் **வியாபாரத்தில், பிசாசின் போராட்டத்தில், கடன் பிரச்சனை** மற்றும் **வியாதிகளில்** சிக்கித் தவித்துக் கொண்டிருந்த, சுமார் **12,27,483** பேர்கள் (தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில்) ஜெபிக்கும்படியாக **தொலைபேசி** மூலமாக தொடர்பு கொண்டு, விடுதலை-சுகத்தை பெற்றுக் கொண்டார்கள்.

**இயேசு கிறிஸ்துவை அறியாத** சுமார் **1,58,767** பேர்களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கவும், சுமார் 16,307 பேர்களை **கிறிஸ்துவுக்குள் வழி நடத்த**வும், சுமார் **20,581** பேர்களுக்கு ஜெபித்து **ஆலோசனை**கள் வழங்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## ஆலோசனை ஜெப மையம்!

பல விதமான **பிரச்சனைகள், போராட்டங்கள்** மத்தியில், 'இயேசு விடுவிக்கிறார்'–**ஆலோசனை ஜெப மையத்திற்கு நேரடி**யாக வந்திருந்த சுமார் **1,32,307** பேர்களில், சுமார் **45,779** பேர்களின் **விடுதலைக்காக** ஜெபிக்கவும், சுமார் **40,820** பேர்களுக்கு **ஆலோசனை** வழங்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**இயேசு கிறிஸ்துவை அறியாத** சுமார் 34,467 பேர்களுக்கு **சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு**, சுமார் **9,452** பேர்கள் **இரட்சிப்பு**க்குள் வழி நடத்தப்பட்டார்கள். அவர்கள் தொடர்ந்து கர்த்தருக்குள் நிலைத்திருக்க சுமார் **373 'உங்களுக்கு நற்செய்தி!'** என்கிற புத்தகமும், சுமார் **330** முழு **பரிசுத்த வேதாகமமும், கைப் பிரதி**களும் கொடுக்கப்பட்டது.

**குடும்ப பிரச்சனை, கடன் பிரச்சனை, மன அழுத்தம், தவறான உறவுகள், தற்கொலை எண்ணம்**, பல **விதமான பாவங்கள், சமூக வலைத்தள அடிமைத்தனம், போதை பழக்கம், குடி, சாபம்** போன்ற பிரச்சனைகளிலிருந்தும், **பிசாசின் பிடி**யிலிருந்தும் விடுதலை வேண்டி **நேரடி**யாக வந்திருந்த சுமார் 6,721 பேர்களுக்கு **ஆலோசனை** வழங்கி ஜெபித்தபோது, **விடுதலை**யை பெற்றுக் கொண்டார்கள்.



## பத்திரிக்கை ஊழியம்!

ஒவ்வொரு மாதமும் **தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், சிங்களம்** ஆகிய **7 மொழி**களில் வெளியிடப்பட்டு வருகிற 'இயேசு விடுவிக்கிறார்'–**பத்திரிக்கை**கள் மூலமாக, **உலகமெங்கும்** சுமார் **3,91,855**க்கும் அதிகமான **குடும்பங்கள்** ஆசீர்வதிக்கப்பட்டன.

மட்டுமல்ல, புதிதாக **குஜராத்தி, பெங்காளி** ஆகிய **2 மொழி**களில் இப்பத்திரிக்கை jesusredeems.com/magazine/ என்கிற Websiteல் Upload செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலமாக லட்சக்கணக்கான புற ஜாதி மக்கள் மெய் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டார்கள். ஒவ்வொரு மாதமும் இந்த ஊழியத்தின் தேவைகளை கர்த்தர் அற்புதமாக சந்தித்தார்.

## சமுதாய நலத் திட்டப் பணிகள்!

### (புது வாழ்வு சங்கம்!)

**புது வாழ்வு குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்** மூலமாக சுமார் **200** ஏழை பிள்ளைகளுக்கு தினமும் **'டியூஷன்'** நடத்தப்பட்டு, ஊட்டச் சத்துள்ள **உணவும்** வழங்கப்பட்டது. தினசரி **பாட வகுப்பு**கள், **திறன் வளர்ச்சி பயிற்சி**கள், **வேதாகம வகுப்பு**கள் மற்றும் **கல்வி சுற்றுலா**வும் செயல்படுத்தப்பட்டது.

**புது வாழ்வு அகாடமி**யின் மூலமாக சுமார் **300**க்கும் அதிகமான ஏழை கல்லூரி மாணவர்களுக்கு **கணினி பயிற்சி, ஆங்கில மொழி பயிற்சி** மற்றும் **வாழ்வியல் பயிற்சி** வகுப்புகள் நடத்தப்பட்டது.

I.A.S., தேர்வு எழுத விரும்புகிற கிராமப் புற ஏழை மாணவர்களுக்காக **தானியேல்** I.A.S.,– **பயிற்சி மையம்** மூலமாக, **நாலுமாவடி** மற்றும் **திருநெல்வேலி**யில் நடத்தப்பட்ட **பயிற்சி வகுப்பு**கள் மற்றும் Online **வகுப்பு**களில் **150** பேர்கள் பயிற்சி பெற்றார்கள்.

**திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி** ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிற சுமார் **280 பெண்கள் சுய உதவிக் குழு**க்களிலுள்ள பெண்கள் குழுவாக கூடி **ஜெபிக்க**வும், **சுய தொழில் செய்வதற்கான வாய்ப்பு**களும் வழங்கப்பட்டது. 3 மாதங்களுக்கு ஒருமுறை **குழு தலைவிகளின் கூடுகை** மற்றும் **வருடாந்திர சிறப்பு கூடுகை** நடத்தப்பட்டு, அவர்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக் கொணரப்பட்டது.

**'பீடி'** சுற்றி பிழைப்பு நடத்துகிற ஏழை பெண்களின் மறுவாழ்விற்காக அமைக்கப்பட்ட **திறன் வளர்ச்சி மையங்கள்** மூலமாக **140** பெண்கள் **தையல் பயிற்சி** பெற்றனர்.

பல கிராமங்களில் **தனி நபர்** மற்றும் **குழு தையலகங்கள்** துவங்கப்பட்டு, திறமை மிக்க பெண்களுக்கு சிறப்பு **ஊக்கப் பரிசு** வழங்கப்பட்டது. மேலும், சுய உதவிக் குழு தலைவிகளுக்கு **இன்பச் சுற்றுலா** ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. **புது வாழ்வு சுய உதவிக் குழு** மூலமாக **தையல் கடைகள், உணவகங்கள், துணிகள்–உணவுப் பொருட்கள் விற்பனை நிலையம்** மற்றும் **வீட்டு உபயோகப் பொருள் அங்காடி** நடத்தி, பெண்களின் வாழ்வாதாரத்திற்கான வழி வகை செய்து கொடுக்கப்பட்டது.

**புது வாழ்வு மறு சீரமைப்புத் திட்டம்** மூலமாக, தமிழகத்திலுள்ள பல பகுதிகளில் வாழும் **தெருவோரவாசிகள், தர்மம் எடுத்துப் பிழைப்பவர்கள், பாலியல் தொழிலாளர்கள், சாமியார்கள்** மற்றும் **திருநங்கையர்களை** சந்தித்து, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கான **உதவிகளை வழங்கி, நற்செய்தி**யும் அறிவிக்கப்பட்டது.

குறிப்பாக **சென்னை, மதுரை** மற்றும் **திருச்சி** ஆகிய மாநகரங்களின் பல பகுதிகளில் வசிக்கும் **திட்டப் பயனாளி**களுக்கு **தினமும் இரவு உணவு** வழங்கப்பட்டது. நமது **புது வாழ்வு திட்ட தன்னார்வலர்**கள், சுமார் **2,000**க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு **தினமும் இரவு உணவு, உடைகள்** மற்றும் **போர்வை**கள் வழங்கினார்கள்.

பள்ளிக்குச் செல்ல இயலாத ஏழை பிள்ளைகளின் கல்வியை பொறுப்பெடுத்து, பல இடங்களில் தினமும் நடத்தப்பட்டு வருகிற **இலவச டியூஷன் வகுப்பு**களுக்கு, குறிப்பாக **நரிக் குறவர்கள், சாட்டையடித்து பிழைப்பு நடத்துகிற மக்கள்** மற்றும் சமுதாயத்தில் **பிற்படுத்தப்பட்ட மக்கள்** தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்கின்றனர். அதன் மூலமாக சுமார் **1,200**க்கும் அதிகமான பிள்ளைகள் தினமும் பயனடைந்தார்கள். மட்டுமல்ல, அவர்களுக்கு **கல்விக்கான உதவித் தொகை, உபகரணங்கள்** மற்றும் **இலவச மருத்துவ உதவி**கள் வழங்கப்பட்டது.

**பாலியல் தொழில் செய்யும் பெண்கள்** வேறு தொழில் செய்து வாழ, 16 இடங்களில் **புது வாழ்வு திறன் வளர்ச்சி மையங்கள்** அமைக்கப்பட்டு, அவர்களுக்கு **தையல் பயிற்சி, ஆரி எம்ப்ராய்டரி பயிற்சி** மற்றும் **கணினி பயிற்சி** அளிக்கப்பட்டு, பயிற்சி காலம் முடிந்த பிறகு **இலவசமாக தையல் இயந்திரம்** வழங்கி, **புதிய தொழில் துவங்க உதவி**யும் செய்யப்பட்டது. மேலும், அவர்களுடைய பிள்ளைகளின் **பாதுகாப்பு நலன்** மற்றும் **கல்விக்கான உதவி**களும் செய்து கொடுக்கப்பட்டது.

நமது **புது வாழ்வு தன்னார்வலர்**கள், சென்னையை சார்ந்த **தண்டையார்பேட்டை, பெரம்பூர், தேனாம்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, மயிலாப்பூர், செம்மஞ்சேரி, சேப்பாக்கம், பட்டினப்பாக்கம்** மற்றும் **எண்ணூர்** ஆகிய பகுதிகளில் வசிக்கிற ஏழை–எளிய மக்களின் தேவைகளை அறிந்து, அவர்களுடைய வாழ்வாதாரம் முன்னேற **சிறு தொழில்** செய்வதற்காக பல்வேறு **நலத் திட்ட உதவி**களை செய்தார்கள்.

**நரிக் குறவர்கள்** மற்றும் **தர்மம் எடுத்துப் பிழைப்பவர்**களுக்கென்று **மாதம் ஒருமுறை** நாலுமாவடி–**தேவனுடைய கூடாரத்தில் சிறப்பு கூடுகை** நடத்தப்பட்டு, அவர்களுக்கு **தேவையான உதவி** மற்றும் **உணவு** வழங்கப்பட்டது. மாதத்தின் **கடைசி செவ்வாய்** கிழமைதோறும் **மாற்றுத் திறனாளி**களுக்கென்று **சிறப்புக் கூடுகை** நடத்தப்பட்டு, அவர்களுடைய **வாழ்வாதாரத்**திற்கான **தேவைகளும், செயற்கை உபகரணங்களும்** வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் சுமார் **800**க்கும் அதிகமானோர் இதில் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். **விதவை**களுக்கான **சிறப்பு கூடுகை**யில் சுமார் **1,000**க்கும் அதிகமான ஏழை விதவைகள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர்.

கீழ மாதாபுரம்–**ஜெப மலை**யில் மாதம் ஒருமுறை **மாற்றுத் திறனாளி**களுக்கென்று நடத்தப்பட்ட **விசேஷித்த கூடுகை**யில் சுமார் **300**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மேலும், **ஏழை விதவைகள்** மற்றும் **முதியோர்கள் சிறப்பு** மாதாந்திர **கூடுகை**களில் சுமார் **1,000**க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

தங்களுக்கான மருத்துவ உதவி, கல்வி மற்றும் வாழ்வாதார தேவைகளுக்காக விண்ணப்பிக்கிற ஏழை மக்களை விசாரித்து, **தேவை உள்ளவர்களுக்கு பொருளுதவி** செய்யப்பட்டது. **விதவைகள்** மற்றும் அவர்களுடைய **பிள்ளைகளை பராமரிக்க**வும் கர்த்தர் உதவி செய்தார்.

**'ஒபதியா திட்டம்'** (PROJECT OBADIAH) மூலமாக **ஒவ்வொரு மாதமும்**, சுமார் **100 விசுவாசிகள்** மற்றும் **தேவ ஊழியர்**களுடைய குடும்பங்களுக்கான **உணவு** மற்றும் **அத்தியாவசிய தேவை**கள் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டது.

ஜெப மலை–**புது வாழ்வு சுய உதவி குழு**க்கள் மூலமாக, **ஒவ்வொரு மாதமும்** தேவையுள்ள கிராமங்களுக்கு **கண், பல்** மற்றும் **பொது மருத்துவ சிறப்பு முகாம்**கள் நடத்தப்பட்டது.

சுய உதவி குழுக்கள் மூலமாக பெண்கள் குழுவாக இணைந்து, ஜெப மலை–கீழ மாதாபுரத்தை சுற்றியுள்ள கிராமங்களில் **சுவிசேஷ ஊழியம்** செய்து, **நற்செய்தி கூடுகை**களை நடத்தினார்கள்.

**'ஏலிம்' சுத்திகரிக்கப்பட்ட இலவச குடி நீர் திட்டம்** மூலமாக, **30 கிராமங்களில்** வசிக்கும் சுமார் **800** ஏழை குடும்பங்களுக்கு **தினமும் சுத்தமான குடி நீர்** வழங்கப்பட்டது.

**பண்டிகை காலங்களில்** சுமார் **25,000**க்கும் அதிகமான ஏழை–எளிய மக்களுக்கு

**புத்தாடை**களும், **வெகுமதி**களும், **சிறப்பான உணவு**ம் வழங்கப்பட்டது. தமிழகத்தின் பல பகுதிகளில் வசிக்கும் ஏழை-எளிய மக்களுக்கு **கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி** அறிவிக்கப்பட்டது.

### பேரிடர் நிவாரணப் பணிகள்!

கடந்த 2025ம் வருடம் **பஞ்சாப்** மாநிலத்தில் ஏற்பட்ட கோர வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட, சுமார் **200** குடும்பங்களுக்கு நமது ஊழியத்தின் சார்பாக, ₹ **1,200** மதிப்பிலான **உணவு பொருட்கள்** மற்றும் **அத்தியாவசிய பொருட்கள்** நிரம்பிய தொகுப்புகள் வழங்கப்பட்டது.

மேலும், **ஜம்மு-காஷ்மீர்** மாநிலத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட **11** கிராமங்களை சார்ந்த **250** குடும்பங்களுக்கு, ஒரு மாதத்திற்கு தேவையான **உணவு பொருட்கள்** மற்றும் **போர்வைகள்** வழங்கப்பட்டன.



### தேவனுடைய பண்டக சாலை மற்றும் உதவி பெறும் மையம்!

தேவனுடைய கூடாரத்தில் **தினந்தோறும்** செயல்பட்டு வருகிற **தேவனுடைய பண்டக சாலை**யின் மூலமாக ஏழை-எளிய மக்களின் தேவைகள் சந்திக்கப்படும்படியாக, அனேக தேவ பிள்ளைகள் **உணவுப் பொருட்கள்**, **உடைகள்**, **காணிக்கைகள்** மற்றும் **வாழ்வாதார உதவிப் பொருட்களை** படைத்தார்கள்.

அந்த பொருட்கள் அனைத்தும் தேவனுடைய கூடாரத்தில் செயல்பட்டு வருகிற '**ஏழைகள் உதவி பெறும் மையத்தில்**' வைக்கப்பட்டு, தேவையோடு வந்த சுமார் **8,000** ஏழை-எளிய **குடும்பங்களுக்கு** வழங்கப்பட்டது.

### சமுதாய மேம்பாட்டு பணிகள்!

தூத்துக்குடி மாவட்டம்-**பேய்குளம் அரசு உயர்நிலை பள்ளி**க்கு மொத்த மதிப்பீடு ₹ **22,00,000**ல் நமது பங்காக ₹ 2,60,000 வழங்கி, TVS **ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை**யோடு இணைந்து **புதிய வகுப்பறைகள்** கட்டி கொடுக்கப்பட்டது.

**ஆறுமுகநேரி**-பெருமாள்புரம் தகன மேடை மைதானத்திற்கு ₹ **1,15,000** மதிப்பீட்டில் **வேலி** அமைத்து கொடுக்கப்பட்டது.

**ஏரல்-தூய தெரசா நடுநிலை பள்ளி**க்கு ₹ **1,25,000** மதிப்பீட்டில் R.O. **இயந்திரம்** அமைத்து கொடுத்து, **25,000** லிட்டர் **சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்** வசதி செய்து கொடுக்கப்பட்டது.

**புறையூர்-ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி**க்கு TVS **ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை**யோடு இணைந்து ₹ **1,70,000** மதிப்பீட்டில் **வகுப்பறை**கள் கட்டி கொடுக்கப்பட்டது.

### தமிழக அரசின் 'நமக்கு நாமே!' திட்டத்தில்...!

மொத்த மதிப்பீடு ₹ **30,00,000**ல் **நமது பங்காக** ₹ **10,00,000** வழங்கி, **நாலுமாவடி**யில் **பேவர் பிளாக் சாலை** அமைத்து கொடுக்கப்பட்டது.

கச்சனாவிளையிலுள்ள **கன்னிவிளை கிராமத்தில்** மொத்த மதிப்பீடு ₹ **11,05,000**ல், நமது பங்காக ₹ **2,21,000** வழங்கி, **பேவர் பிளாக் சாலை** அமைத்து கொடுக்கப்பட்டது. மேல ஆத்தூர்-**நரசன்விளை கிராமத்தில்** மொத்த மதிப்பீடு ₹ **50,00,000**ல் நமது பங்காக ₹ **10,00,000** வழங்கி, **பல்நோக்கு உபயோக கட்டிடம்** கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.

### மானிய விலையில் விவசாய உழவுத் திட்டம்!

**நடப்பு பிசான சாகுபடி**யில் **நாலுமாவடி**யை சுற்றியுள்ள சுமார் **125 ஏக்கர் விவசாய நிலம்** மானிய விலையில் **உழவு செய்து** கொடுக்கப்பட்டது.

### 'விவசாயம் காப்போம்' திட்டம்!

நாலுமாவடியை சுற்றியுள்ள, **கடையனோடை**, **நெடுங்கரை**, **பேய்குளம்**, **இருவப்பபுரம்**, **ஆறாம்பண்ணை**, **மணக்கரை**, **தேமான்குளம்**, **வெள்ளமடம்**, **மானாட்டூர்**, **கடம்பாகுளம்** (மடை எண்: 4,7), **நல்லூர்**, **மைக்கண்நாடார்குடியிருப்பு**, **ஆத்தூர் கீழ்குளம்**, **பள்ளிப்பத்து**, **வல்லநாடு**, **நாணல்காடு** ஆகிய கிராமங்களிலுள்ள **பாசன வாய்க்கால்**கள் மற்றும் **வடிகால்**கள் சுமார் ₹ **20,00,000** மதிப்பீட்டில் **தூர் வாரி** கொடுக்கப்பட்டது. இதன் மூலமாக சுமார் **4,000** ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதியை பெற்றன.

### 'இயற்கை காப்போம்' திட்டம்!

தூத்துக்குடி மாவட்டம், **குரங்கணி** முதல், **ஸ்ரீவைகுண்டம்** வரையுள்ள **தாமிரபரணி தென்கரை பகுதி**யில் சுமார் **1,00,000 பனை விதை**கள் ஊன்றப்பட்டது. சுமார் ₹ **3,00,000** மதிப்பீட்டில் **ஆழ்வார்திருநகரி ஊராட்சி** ஒன்றியத்திற்கு **5,000 மரக் கன்று**களும், **நல்லூர்** ஊராட்சிக்கு **1,000 மரக் கன்று**களும் வழங்கப்பட்டது.

### விளையாட்டுத் துறை!

தமிழர் திருநாளை முன்னிட்டு **8ம் ஆண்டு** REDEEMER'S CUPக்கான மாநில அளவிலான கல்லூரி மாணவர்களுக்கு (ஆண், பெண் இருபாலருக்கும்) ₹ **13,00,000** மதிப்பீட்டில் (2 நாட்கள்) **மின்னொளி கபாடி போட்டி** நடத்தப்பட்டது. **ஈஸ்டர்** தினத்தை முன்னிட்டு **2ம் ஆண்டு** REDEEMER'S CUPக்கான மாநில அளவிலான

கல்லூரி மாணவர்களுக்கு ₹ **4,00,000** மதிப்பீட்டில் (2 நாட்கள்) **மின்னொளி கால்பந்தாட்டப் போட்டி** நடத்தப்பட்டது.

₹ **6,00,000** மொத்த மதிப்பீட்டில் நடத்தப்பட்ட (10 நாட்கள்) **இலவச கபாடி பயிற்சி முகாமில்**, தமிழ்நாட்டை சார்ந்த **200** விளையாட்டு **வீரர்களுக்கு பயிற்சி**யளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட **அமெச்சூர் கபாடி கழக ஜூனியர், சீனியர்** அணியினருக்கு **கபாடி பயிற்சி**யளித்து, **பயணச் செலவும் வழங்கப்பட்டது.**

## நல்ல சமாரியன் கிளப்!

பண்டிகை நாட்களில் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் **சிறப்பு கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி**கள் நடத்தப்பட்டு, கிறிஸ்து பிறப்பின் **நற்செய்தி**யை அறிவித்து, தேவையுள்ள மக்களுக்கு **புத்தாடைகள், பரிசுகள்** மற்றும் கிறிஸ்துமஸ் **விருந்து** அளிக்கப்பட்டது. **புதிதாக** பல **நல்ல சமாரியன் கிளப்**புகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை **தமிழகம்** மற்றும் **வெளி மாநிலங்களிலுமாக** செயல்பட்டு வருகிற **98 நல்ல சமாரியன் கிளப்**புகள் மூலமாக, அந்தந்தப் பகுதிகளில் வாழ்கிற தேவையுள்ள மக்களுக்கு **இலவச மருத்துவம், கல்வி** மற்றும் **வாழ்வாதாரத்திற்கான உதவிகள்** செய்யப்பட்டு வருவதோடு, அரசாங்கத்தோடு இணைந்து அனேக **நலத் திட்டப் பணி**களும் செய்து கொடுக்கப்பட்டது.

**கேரளா** மாநிலம்-**கொச்சி**யில் **வருடாந்திர மாநாடு**ம், **நாலுமாவடி**யில் அனைத்து நல்ல சமாரியன் கிளப்பின் **அலுவலக பொறுப்பாளர்கள் கூடுகை**யும் நடைபெற்றது. அதில் **நமது சகோதரர்** அவர்கள், அடுத்த கட்ட சமுதாயப் பணிகளுக்கான செயல் திட்டங்களை பற்றி பகிர்ந்து கொண்டு, சிறப்பாக சமுதாயத் தொண்டாற்றிய கிளப்புகளுக்கு **விருது**களை வழங்கினார்கள்.

## மறுரூபமாக்கும் மையம்!

கடந்த **2025 ஜூலை 1**ம் தேதியன்று, **புதிதாக மறுரூபமாக்கும் மையம்** உருவாக்கப்பட்டு, **2 நாட்கள்** நடைபெற்ற **வாலிபர்**களுக்கான **ஆலோசனை முகாமில் 98** பேர்களும், திருமணமான **பெண்களுக்காக** நடத்தப்பட்ட ஆலோசனை முகாமில் **96** பேர்களும் தேவ ஆலோசனை பெற்று சென்றனர்.

அக். 2ம் தேதி நடைபெற்ற சிறுவர் எழுப்புதல் முகாமிற்கு வந்திருந்த சிறு பிள்ளைகளில் 8 முதல், 12 வயது வரையுள்ள **இளம் வாலிபர்களுக்கு** மட்டும் உணர்ச்சிகளை சரியான முறையில் கையாள்வதை குறித்து விளக்கிச் சொன்னபோது, அனேகர் உணர்வடைந்து தங்களை அர்ப்பணித்தார்கள்.

**திருமணத்திற்காக ஆயத்தப்படுகிற** வாலிப சகோதர, சகோதரிகளுக்காக **2 நாட்கள்** நடத்தப்பட்ட **ஆலோசனை முகாமில்** கலந்து கொண்ட 416 பேர்களுக்கு திருமண வாழ்க்கை குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

தனிப்பட்ட முறையில் **நேரடியாக** வந்த **2,103** பேர்களுக்கும், **குழு**வாக வந்த 663 பேர்களுக்கும், **தொலைபேசி** மூலமாக தொடர்பு கொண்ட **2,919** பேர்களுக்கும், தேவனுடைய கூடாரம்-ஏலிம் வளாகத்தில் தங்கியிருந்து ஜெபிக்க வந்திருந்த சுமார் **1,025** பேர்களுக்கும் ஆலோசனைகள் கொடுக்கப்பட்டது.

கடந்த (2025) செப்டம்பர் மாதம் புதன்கிழமைதோறும், **குடி** மற்றும் **போதை** பழக்கத்திலிருந்து விடுதலை பெற முடியாத நிலைமையில் இருந்த **58** பேர்களுக்கு சிறப்பு ஆலோசனை வழங்கப்பட்டது.

பெண்களுக்காக **3 நாட்கள்** நடைபெற்ற **பெண்கள் எழுப்புதல் முகாமில்** வந்திருந்த சிறு பிள்ளைகளுக்கு வேதாகமத்தின் அடிப்படையில் பாடல்கள், குறு நாடகங்கள் மற்றும் விளையாட்டுகள் நடத்தி, அதன் மூலமாக **போதை பழக்கம், கீழ்ப்படிதல், செல்போன் அடிமைத்தனம்** பற்றிய காரியங்களை குறித்த **விழிப்புணர்வை** வலியுறுத்திச் சொல்லி ஜெபித்தபோது, அனேக சிறு பிள்ளைகள் தங்களை அர்ப்பணித்தார்கள்.

**12 பள்ளி**களுக்கு கடந்து சென்று, சுமார் **1,351** சிறு பிள்ளைகளுக்கு **செல்போன்** மற்றும் **போதை** அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதை குறித்தும், உணர்ச்சிகளை சரியான முறையில் கையாள்வதை குறித்தும் விளக்கிச் சொல்லி, **நற்செய்தி** அறிவிக்கப்பட்டது.

மட்டுமல்ல, **சனிக்** கிழமைதோறும் **சிறுவர் சீர்திருத்த பள்ளி**க்கு சென்று, அங்குள்ள சுமார் 638 சிறுவர்களுக்கு **சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டது.

எனக்கு அன்பானவர்களே,
இந்த 2026**ம் வருடத்திலும்** இந்த ஊழியத்திற்காக **உங்களுடைய ஜெபத்தை இன்னும் அதிகமாக நான் எதிர்பார்க்கிறேன்**. உங்களுக்காக **நாங்களும் அனுதினமும் ஜெபிக்கிறோம்**.

இந்த **ஊழியத்தின் ஆசீர்வாதங்களில் உங்களுக்கும்** முக்கிய **பங்கு இருக்கிறது!** உங்களுக்கான பலன் பரலோகத்தில் மிகுதியாக இருக்கும்! - **உங்கள் சகோதரன்.**





**நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!**

# நீங்களும் அற்புதங்களை பெறலாம்!

**இயேசு கிறிஸ்து உங்களுக்கு அற்புதம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்.** நீங்கள் அவரிடத்தில் அற்புதங்களை பெற்றுக் கொள்ளலாம். ஆனால், நீங்கள் **விசுவாசத்தோடு** ஜெபத்தில் அவரிடத்தில் **கேட்டால்தான்**, உங்களுக்கு **அற்புதம் செய்வார்.**

உங்களுக்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் விண்ணப்பம் பண்ண நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு, இயேசு கிறிஸ்து செய்த அனேக அற்புதங்களில் சிலவற்றைப் பாருங்கள்:



## கையில் அற்புதம்!

திடீரென்று என் வலது **கை பாதிக்கப்பட்டு, சாப்பிட முடியாமல், தூக்க முடியாமல்** 5 மாதங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் ஒரு தேவ கரம் என்னை தொட்டதைப்போல உணர்ந்தேன். அப்பொழுது அந்த **கையில்** அற்புதமான **சுகத்தை பெற்றுக்** கொண்டேன். – **ரமேஷ்**, ஆந்திரா.

## சிந்தையில் மாற்றம் உண்டானது!

என்னிடத்தில் யாராவது பிரச்சனை செய்தால், அவர்களை அரிவாளால் வெட்டி விட வேண்டும் என்கிற சிந்தையோடு, ஒரு வருடமாக என் **வாகனத்தில் அரிவாளை** வைத்திருந்தேன். நான் ஜெபத்தில் கலந்து கொள்ள தேவனுடைய கூடாரத்தில் நுழைந்தபோது, என் **சிந்தையில் இருந்த அந்த எண்ணம் முற்றிலுமாக மாறியது**. இன்றுவரை எனக்கு அந்த எண்ணம் இல்லை. – **தர்மராஜ்**, கரிசல்.



## பூரண சுகத்தை பெற்றேன்!

நான் முழங்கால்படியிட்டு ஜெபிக்கும் போதெல்லாம், **2 கால்**களும் **மறத்து**ப் போய் விடும். மட்டுமல்ல, 6 **மாதங்களாக** கடுமையான **முதுகு வலி**யினாலும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் ஆவியானவருடைய வல்லமை என்னை நிரப்பியபோது, கர்த்தர் எல்லா **பிரச்சனைகளை**யும் **மாற்றி**, எனக்கு **பூரண சுகத்தை** கொடுத்தார். – **தீமோத்தேயு**, கோவை.



## [5 வருட] அசுத்த ஆவி வெளியேறியது!

ஒரு **அசுத்த ஆவி**யின் கிரியையினால், **5 வருட**ங்களாக **தினந்தோறும்** எதாவதொரு **பெலவீனம்** என்னை தாக்கிக் கொண்டே இருந்தது. ஜெப வேளையில் பரிசுத்த வேதாகமம் வாங்கிக் கொடுப்பதாக நான் **பொருத்தனை** செய்து ஜெபித்தேன்.

அப்போது ஒரு தேவ வல்லமை என்னை நிரப்பி, அந்த **ஆவியை** என்னை விட்டு **வெளியேற செய்தது**. பொருத்தனையும் நிறைவேற்றினேன். – **சுபினி**, மார்த்தாண்டம்.





## கட்டி மறைந்து போனது!

என் இடது கையில் **3 வருடங்களாக** ஒரு **பெரிய கட்டி** இருந்தது. கொஞ்ச நாட்களாக **வலி**யெடுக்க ஆரம்பித்தது.

ஜெப வேளையில் நான் அந்த கட்டியின் மீது என் கையை வைத்து ஜெபித்தேன். அப்பொழுது அந்தக் **கட்டி மறைந்து போனது.** – **கலா**, சென்னை.

## ஊன்றுகோலின்றி நடந்தேன்!



ஒரு விபத்தின் நிமித்தமாக **நடக்க முடியாமல்**, ஊன்றுகோல் உதவியோடு, அல்லது யாரையாவது பிடித்துக் கொண்டு மெதுவாகத்தான் என்னால் நடக்க முடியும். வேதனையோடு நான் ஜெபித்து கொண்டிருந்தபோது. ஒரு தேவ வல்லமை என்னை பலமாக ஆட்கொண்டது. அந்நேரம் முதல், **எந்த உதவியும் இல்லாமல்** என்னால் **நடக்க முடிகிறது**. – **அன்புராஜ்**, சென்னை.

## வேதனைகள் நீங்கி, பூரண சுகம்!

**இடுப்பெலும்பில்** ஒரு வருடமாக கடுமையான **வலி** இருந்தது. ஆபரேஷன் செய்த பிறகும் சுகம் கிடைக்கவில்லை. தரையில் **உட்காரவோ**, நேராக **படுக்கவோ முடியாது**.



நான் ஜெபித்து கொண்டிருந்தபோது, ஒரு தேவ கரம் என்னை தொட்டதைப்போல உணர்ந்தேன். அப்பொழுது **வலி நீங்கி**, பூரண **சுகத்தை பெற்று**க் கொண்டேன். – **மணீஷ் செல்வின்**, ஈரோடு.

2 வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு விபத்தில் சிக்கி, இடது கால் **மூட்டு ஜவ்வு கிழிந்து**, **வலி**யோடு, **காலை மடக்க முடியாமல்** கஷ்டப்பட்டேன். டாக்டர்கள், "ஆபரேஷன் பண்ண வேண்டும்." என்றார்கள். ஆனால் நான் ஆபரேஷனுக்கு சம்மதிக்காமல், ஜெப வேளையில் விசுவாசத்தோடு ஜெபித்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு தேவ வல்லமை என்னை தொட்டு **வலியை மறையப்** பண்ணியது. இப்பொழுது **காலை மடக்கவும் முடிகிறது.** – **கௌசல்யா**, கண்ணன்கோட்டை.



## தற்கொலை எண்ணம் மாறி, தெளிவான பார்வை!



**மனக் குழப்பத்தினால்** நான் பாதிக்கப்பட்டு, **5 வருட**ங்களாக எனக்குள் அடிக்கடி **தற்கொலை எண்ணம் தலை தூக்கியது.** மட்டுமல்ல, **தெளிவான பார்வை இல்லாமலும்** கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில் ஆவியானவரின் வல்லமை என் மீது இறங்கியபோது, **மனக் குழப்பம் நீங்கி, தற்கொலை எண்ணமும் மாறி, தெளிவான பார்வை**யையும் பெற்றுக் கொண்டேன். – **அன்னலட்சுமி**, சுரண்டை.

**பாருங்கள்,**
இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்!** உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.** நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, **விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து** உங்களுக்கும் அற்புதம் செய்து, **உங்கள் துக்கத்தை மாற்றுவார்.** திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 – மதியம் 3:00 மணிவரை ஜெபிப்போம். **நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.** ஜெபத்தில் கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

– உங்கள் சகோதரன்.

**Address:**
**Standing in the Gap Prayer,**
**Nalumavadi-628 211,**
**Thoothukudi Dist., India.**

**உங்கள் அற்புதத்தின் நாள்:**

**நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெபம்!**

**ஜனவரி 31**

(கடைசி சனிக்கிழமை)



# நாகர்கோவிலில் வெளிப்பட்ட
# கர்த்தருடைய வல்லமை!

கடந்த (2025) அக். 4,5 ஆகிய தேதிகளில், கன்னியாகுமரி மாவட்ட தலைநகரான **நாகர்கோவிலில்** உள்ள **ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி** மைதானத்தில், மாபெரும் **அற்புதப் பெருவிழா**வை நடத்தி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும், **'இயேசு விடுவிக்கிறார்'** அறங்காவலர்கள், சகோ. **தேவராஜ்**, சகோ. **ஆர்தர் செல்வம்** ஆகியோரது தலைமையில், சகோ. **ஜெயக்குமார்** மற்றும் நமது ஊழியக் குழுவினர் இணைந்து மிக நேர்த்தியாக செய்திருந்தார்கள்.

அற்புதப் பெருவிழா நடந்த 2 நாட்களும் மைதானம் முழுவதும் நிரம்பி வழியும்படியாக திரளான மக்களை கர்த்தர் கூட்டிச் சேர்த்தார். முதல் நாள் மாண்புமிகு திரு. **மனோ தங்கராஜ்** (தமிழக பால்வளத் துறை அமைச்சர்) அவர்களும், 2வது நாள், திரு. **மகேஷ்** (நாகர்கோவில்-மாநகராட்சி மேயர்) அவர்களும் **சிறப்பு விருந்தினர்**களாக கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தார்கள். மட்டுமல்ல, பல்வேறு திருச்சபைகளை சார்ந்த தேவ ஊழியர்கள் எந்த விதமான சபைப் பாகுபாடு





மாண்புமிகு திரு. மனோ தங்கராஜ் (தமிழக பால்வளத் துறை அமைச்சர்)



திரு. மகேஷ் (நாகர்கோவில்-மாநகராட்சி மேயர்)

இல்லாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தது, எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

முதல் நாள் செய்தி வேளையில், நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், **'மெய்யாகவே விடுதலையாவீர்கள்!'** என்கிற தலைப்பிலும், கடைசி நாளில், **'பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள்!'** என்கிற தலைப்பிலும் தேவ செய்தியளித்து, ஜெபத்தில் வழி நடத்தியபொழுது, ஜனங்கள் மத்தியில் தேவ வல்லமை பலமாக வெளிப்பட்டது.

விசேஷமாக, கடைசி நாளில் ஆவியானவர் மிகுந்த வைராக்கியத்தோடு



இறங்கி, நமது சகோதரர் அவர்கள் மூலமாக பேசிய **எச்சரிப்பின் செய்தி**யானது, கூட்டத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவரையும் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தியது.

ஜெப வேளையில், அனேகர் விடுதலை-சுகம் பெற்று, சாட்சி சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். ஆவியானவரின் வல்லமைக்கு முன்பான அசுத்த ஆவிகளால் நிலை நிற்க முடியாமல் அலறிக் கொண்டு வெளியேறிப் போனது. கண்ணீரோடு வந்த மக்கள் அனைவரும் மிகுந்த களிப்போடு கடந்து சென்றார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

– ஒருங்கிணைப்பாளர்.

## நாகர்கோவில்—அற்புதப் பெருவிழாவில் கர்த்தர் செய்த அனேக அற்புதங்களில் சில...

### கட்டிகள் மறைந்தன!



என் இடது **காலில் 3 வருட**ங்களாக ஒரு **கட்டி** இருந்தது. சிகிச்சையில் பயனில்லை. ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, அந்தக் **கட்டி மறைந்து** போயிற்று. – **வனிதா**, மருங்கூர்.

என் **கர்ப்பப் பை**யிலிருந்த ஒரு **கட்டி**யினால், **4 மாத**ங்களாக **வேதனை**ப்பட்டேன். டாக்டர்கள், "நீங்கள் **ஆபத்தான நிலைமை**யில்தான் இருக்கிறீர்கள்!" என்று சொல்லி விட்டார்கள்.



மிகுந்த கண்ணீரோடு நான் ஜெபித்தபோது, நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலினால் **என் பெயரைச் சொல்லி அழைத்து**, தேவ கரம் என்னைத் தொட்டு, எனக்கு சுகத்தை தருவதாகச் சொன்னார்கள். அந்நேரமே அந்த **கட்டி மறைந்தது**. – **பார்வதி**, நாகர்கோவில்.

### பார்வை தெளிவானது!



சுமார் **10 வருட**ங்களாக என் இடது கண்ணில் **தெளிவான பார்வை இல்லாமல்** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், அந்த கண்ணில் மின்னலை போன்ற ஒரு வெளிச்சம் பட்டது. அப்பொழுது **கண் பார்வை தெளிவானது**. – **டைட்டஸ்**, தேங்காய்பட்டணம்.



என் கண்களில் **தெளிவான பார்வை இல்லாமல்**, சுமார் **3 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில், கண்களில் என் கைகளை வைத்து ஜெபித்து விட்டுப் பார்த்தபோது, **பார்வை தெளிவானது**.

– **கிருஷ்வம்மாதேவி**, நாகர்கோவில்.



## தீராத வலி நீங்கியது!



தீராத **வயிற்று வலி**யினால் 2 வருடங்களாக **வேதனை**ப்பட்டேன். ஜெப வேளையில் தேவ அபிஷேகம் என் மீது இறங்கியது. அந்த வினாடியே **வயிற்று வலி நீங்கி**ப் போயிற்று. – **ஐயப்பன்**, தக்கலை.

## (10 வருட) வயிற்று வலி நீங்கியது!



அடிக்கடி என் **வயிற்றில்** உண்டான **வலி**யின் நிமித்தமாக **ஆபரேஷன் செய்தும் சுகம் கிடைக்காமல்**, சுமார் 10 **வருட**ங்களாக **வேதனை**ப்பட்டேன். ஜெப வேளையில் தேவ வல்லமை என்னைத் தொட்டு, அந்த **வலியை** முற்றிலுமாக **நீக்கி**ப் போட்டது. – **அன்னபாய்**, மேக்காமண்டபம்.

## வேதனை நீங்கி, சுகம்!



சுமார் 10 **வருட**ங்களாக என் **2 முழங்கால்**களில் இருந்த **வலி**யினால் **நடக்க முடியாமல்**, வலது **கையை உயர்த்த முடியாமல்** கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் ஒரு தேவ வல்லமை என்னை ஆட்கொண்டபோது, அந்த **வலி முற்றிலுமாக நீங்கி**, நல்ல **சுகத்தை பெற்று**க் கொண்டேன். – **வாணி**, நாகர்கோவில்.



என் **2 முழங்கால்**களிலும் இருந்த **வலி**யினால், **5 நிமிடம் கூட நிற்க முடியாமல், கால்களை மடக்க முடியாமல், 4 மாத**ங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், ஆவியானவர் என்னை தொட்டு எனக்கு **பூரண சுகத்தை** கொடுத்தார். – **சுபாஷினி**, நாகர்கோவில்.

## தற்கொலை ஆவி வெளியேறி, விடுதலை!



ஒரு **தற்கொலை ஆவி**யின் கிரியையினால் உண்டான **மரண பயத்தினால் 4 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன். நான் தூங்கும் போதெல்லாம் அந்த ஆவி என் கண்களுக்கு முன்பாக வந்து நின்று, '**நீ தற்கொலை செய்து கொள்!**' என்று அடிக்கடி என்னை **பயமுறுத்தும்**. அதனால் எப்போதும் எனக்குள் ஒரு **மரண பயம்** இருந்தது. ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, ஒரு வெளிச்சம் என் மீது விழுந்தது. அப்பொழுது, **தற்கொலை ஆவி** என்னை விட்டு **வெளியேறி**ப் போனது. இப்போது முழு **விடுதலை**யோடு இருக்கிறேன். – **பவித்திராள்**, கூழக்கடை.


நாலுமாவடி - தேவனுடைய கூடாரத்தில்

தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை!

ACHIEVERS

நாள்: 2026 பிப்ரவரி 1 (ஞாயிறு)

நேரம்: மதியம் 1:00 - மாலை 4:00.



தேவ ஆலோசனையும், ஜெபமும்: சகோ. மோகன் சி. லாசரஸ்.

பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் எழுத இருக்கும் தேர்வை குறித்து பயத்தோடு, கலக்கத்தோடு இருப்பார்களானால், அவர்களை இந்தப் பிரார்த்தனைக்கு அனுப்பி வையுங்கள். அவர்களுக்காக சிறப்புப் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு: 97509 55547, 97509 55548.



# செய்திகள்!

## சிறுநீரக செயலிழப்பால், ஆண்டுக்கு 2.50 லட்சம் பேர் இறப்பு!

"**இந்தியாவில்**, சுமார் **7 கோடி மக்கள் நாள்பட்ட சிறுநீரக நோயோடு வாழ்கின்றனர்!**' என்றும், 'சிறுநீரக செயலிழப்பு காரணமாக, **ஆண்டுக்கு 2.50 லட்சம் பேர் இறக்கின்றனர்!**' என்றும், ஒரு புள்ளி விபரம் தெரிவித்திருக்கிறது. இதேபோல, நாள்பட்ட சிறுநீரக பிரச்சனையால் இந்தியாவில் இறப்பு விகிதம் 1,000க்கு 18 பேர்கள் என்றும், தமிழகத்தில் 1,000க்கு 35 பேர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

நமது 2 சிறுநீரகங்களும் நமது உடலில் உற்பத்தியாகும் நச்சுப் பொருட்களையும், நாம் உட்கொள்ளும் மருந்து-மாத்திரைகளிலுள்ள **நச்சுக்களை**யும் சிறுநீர் மூலமாக **வெளியேற்றுகிறது!** மொத்தமாக 150 முதல், **180 லிட்டர் இரத்தத்தை தினமும் சுத்தப்படுத்துகிறது!** நாளொன்றுக்கு சுமார் **1½ லிட்டர் சிறுநீரை உற்பத்தி செய்கிறது!**. இப்படிப்பட்ட சிறுநீரகங்களின் பாதிப்பு அதிகரித்து வருவது, உண்மையில் மிகுந்த வேதனைக்குரியது.

சிறுநீரக நோய் பாதிப்புகள், தொடக்கத்தில் எந்த விதமான அறிகுறியையும் ஏற்படுத்துவதில்லை. **Creatinine** அளவு சிறு பிள்ளைகளுக்கு 2.0 மில்லி கிராமுக்கு அதிகமாகவும், பெரியவர்களுக்கு 5.0 மில்லி கிராமுக்கு அதிகமாகவும் இருந்தால், அவர்களது சிறுநீரகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

கட்டுப்படாத **சர்க்கரை நோய்**, கட்டுப்பாட்டில் இல்லாத **இரத்த அழுத்தம்**, **புகை பழக்கம்**, **மது பழக்கம்**, **சிறுநீரக தொற்றுகள்**, **சிறுநீரக கற்கள்**, **உடல் பருமன்**, **காச நோய்**, **வலி நிவாரணி மாத்திரைகளின் பக்க விளைவுகள்**, **உணவிலுள்ள நச்சுக்கள்**, **Prostate வீக்கம்** மற்றும் **புற்று நோய்** போன்றவைகள், **சிறுநீரக பாதிப்பதற்கான முக்கிய காரணங்களாக இருக்கிறது!"** என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

மேலும், "சிறுநீரக பாதிப்பு!' என்பது, உலகளாவிய ஒரு பிரச்னையாக இருக்கிறது! இந்த பாதிப்பு **இந்தியாவிலும், தமிழகத்திலும் அதிகமாக இருக்கிறது**.

தமிழகத்தில் கடந்த ஆண்டு நோய் தடுப்புத் துறை சார்பில், சிறுநீரக பிரச்சனைகள் தொடர்பான பாதிப்புகள் அதிகமாக இருக்கிற இடங்களை தேர்வு செய்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

18 வயதுக்கு மேற்பட்டவர்களிடத்தில் நடத்தப்பட்ட இந்த பரிசோதனையில், 9.5 சதவீதம் பேர்களுக்கு இரத்தத்தில் **Creatinine** அளவு அதிகமாக இருப்பதும், 5.8 சதவீதம் பேர்களுக்கு சிறுநீரில் **Albumin** என்னும் புரதம் அதிகமாக இருப்பதும், 7.7 சதவீதம் பேர்களுக்கு சிறுநீரில் இரத்த சிவப்பணுக்கள் இருப்பதும், 10,000 பேர்களில் 5ல் ஒருவருக்கு சிறுநீரக பாதிப்பு இருப்பதும் உறுதி செய்யப்பட்டது.

இதன்படி, **தமிழகத்தில் 65,000 பேர்கள் நாள்பட்ட சிறுநீரகப் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்**. இவர்களில் 15,000 பேர் மாற்று சிறுநீரகம் மற்றும் **Dialysis** போன்ற உயர் சிகிச்சைகளுக்காக காத்திருக்கின்றனர். மேலும், தமிழகத்தில் 3ல் 2 பேருக்கு **சிறுநீரக பாதிப்பு ஏற்பட இரத்தக் கொதிப்பும், சர்க்கரை நோயுமே முக்கிய காரணமாக இருக்கிறது** என்பதும் கண்டறியப்பட்டது.

எனவே, **இரத்தக் கொதிப்பு** மற்றும் **சர்க்கரை நோயை** ஆரம்பத்திலேயே கண்டறிந்து **கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்**. **புகையிலை** மற்றும் **மது பழக்கத்தை தவிர்க்க வேண்டும்**. வாரத்தில் 5 நாட்கள் **45 நிமிடங்கள் நடைப் பயிற்சி** மேற்கொள்ள வேண்டும். நாள் ஒன்றுக்கு உண்ணும் **உப்பின் அளவு 2 முதல், 5 கிராமிற்குள்** இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். **தினமும் 2½ லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்**.

இது போன்ற செயல்களை தொடர்ந்து மேற்கொண்டால், நாள்பட்ட சிறுநீரக பிரச்சனைகளை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும்." என்று மருத்துவ நிபுணர்கள் கூறினார்கள்.

(நன்றி: 'தினகரன்', 2025 டிசம்பர் 6, பக். 14).

**(இந்தியா வியாதிகளில்லாத ஆரோக்கியமான தேசமாக உருவாக ஊக்கமாக ஜெபிப்போம்.)**

'இயேசு விடுவிக்கிறார்'

# உலக எழுப்புதல் ஜெப மையங்கள்!



| | |
|---|---|
| ஆம்பூர் | - 94425 50315 |
| செங்கல்பட்டு | - 95975 88831 |
| கடலூர் | - 99651 44000 |
| திண்டுக்கல் | - 63830 15262 |
| ஈரோடு | - 97507 22000 |
| காஞ்சிபுரம் | - 89036 35315 |
| | 044-2723 3760 |
| காரைக்குடி | - 80122 11022 |
| கரூர் | - 94423 57315 |
| ஊட்டி | - 94423 48999 |
| | 0423-244 18 19 |
| சேலம் | - 83000 19710 |
| சிவகாசி | - 94429 06567 |
| | 04562-276 567 |
| தஞ்சாவூர் | - 94443 81971 |
| | 04362-233 334 |
| திருவாரூர் | - 99767 66322 |
| திருவண்ணாமலை | - 94882 00305 |
| திருச்சி | - 83441 19000 |
| | 0431-274 10 25 |
| வேளாங்கண்ணி | - 97158 33000 |
| வேலூர் | - 94429 79556 |
| | 0416-22 41 556 |
| விழுப்புரம் | - 83444 11022 |

**தூத்துக்குடியில்**

| | |
|---|---|
| போல்டன்புரம் | - 0461-2339743 |
| | 97509 55549 |
| ஆசிரியர் காலனி | - 83441 16000 |

**நாமக்கல்லில்**

| | |
|---|---|
| நாமக்கல் | - 94886 18305 |
| பள்ளிப்பாளையம் | - 63815 12158 |

**தேனியில்**

| | |
|---|---|
| தேனி | - 99767 66422 |
| | 04546-255 335 |
| பெரியகுளம் | - 94881 45305 |

**திருப்பூரில்**

| | |
|---|---|
| திருப்பூர் | - 94420 82200 |
| | 0421-22 333 45 |
| தாராபுரம் | - 83003 60315 |

**இராணிபேட்டையில்**

| | |
|---|---|
| இராணிபேட்டை | - 95002 83179 |
| | 04172-27 36 63 |
| அரக்கோணம் | - 63819 42472 |

**உலக எழுப்புதல் ஜெப கோபுரங்கள்**

| | |
|---|---|
| தர்மபுரி | - 95242 20022 |
| திருச்சி | - 94884 30305 |

**கோவையில்**

| | |
|---|---|
| கோவை | - 89034 05315 |
| | 0422-230 90 40 |
| பொள்ளாச்சி | - 94878 56205 |
| | 04259-292 785 |

**திருவள்ளூரில்**

| | |
|---|---|
| திருவள்ளூர் | - 70105 86464 |
| | 044-27665 586 |
| திருத்தணி | - 83449 49444 |

**கிருஷ்ணகிரியில்**

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி | - 95249 99711 |
| ஓசூர் | - 95249 99722 |
| | 04344-22 45 00 |

**திருநெல்வேலியில்**

| | |
|---|---|
| பாளையங்கோட்டை | - 90474 80484 |
| | 0462-25 77 484 |
| திசையன்விளை | - 94878 10845 |
| வள்ளியூர் | - 94887 03188 |

**தென்காசியில்**

| | |
|---|---|
| ஆலங்குளம் | - 99653 77427 |
| சுரண்டை | - 83445 22555 |
| சங்கரன்கோவில் | - 83449 49555 |
| தென்காசி | - 99653 56777 |

**கன்னியாகுமரியில்**

| | |
|---|---|
| நாகர்கோவில் | - 89032 79469 |
| | 04652-27 94 69 |
| மார்த்தாண்டம் | - 94867 06832 |
| | 04651-20 52 11 |

**மதுரையில்**

| | |
|---|---|
| சின்ன சொக்கிகுளம் | - 95244 15150 |
| | 0452-25 31 305 |
| சுப்ரமணியபுரம் | - 89735 33000 |
| | 0452-26 77 300 |

**சென்னையில்**

| | |
|---|---|
| ஆதம்பாக்கம் | - 83444 33116 |
| | 044-421 300 56 |
| அம்பத்தூர் | - 93846 72249 |
| | 044-26 24 1070 |
| எழும்பூர் | - 94879 62305 |
| | 044-2841 2300 |
| புரசைவாக்கம் | - 94876 68705 |
| | 044-435 777 68 |
| இராயபுரம் | - 83444 83222 |
| | 044-259 857 54 |
| தாம்பரம் | - 94885 29099 |
| | 044-222 613 99 |
| விருகம்பாக்கம் | - 94428 55315 |
| | 044-23772339 |

**வெளி மாநிலங்களில்**

| | |
|---|---|
| சண்டிகர் | - 94428 42315 |
| டில்லி | - 99422 35304 |
| | 011-35580428 |
| புதுச்சேரி | - 83444 33800 |
| ராஞ்சி | - 99653 55516 |
| செகந்திராபாத் | - 91778 35305 |

**ஆந்திராவில்**

| | |
|---|---|
| சித்தூர் | - 94877 34603 |
| திருப்பதி | - 94889 38305 |

**மும்பையில்**

| | |
|---|---|
| தாராவி | - 80824 10410 |
| மலாடு | - 96640 50567 |

**கேரளாவில்**

| | |
|---|---|
| கோட்டயம் | - 94867 05315 |
| திருவனந்தபுரம் | - 92497 18266 |
| | 0471-233 13 92 |

**கர்நாடகாவில்**

| | |
|---|---|
| சிவாஜி நகர் | - 96328 14414 |
| | 080-3545 45 45 |
| பிரேசர் டவுண் | - 95910 77110 |
| ஹாசன் | - 94497 40391 |
| மைசூரு | - 98863 11777 |
| தும்கூரு | - 89045 14598 |
| JP நகர் | - 080-79692410 |
| KGF | - 93537 10498 |

**வெளி நாடுகளில்**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியா | - +61 421 949 920 |
| கனடா | - +1(416)806-2410 |
| துபாய் | - +97 150 5516 534 |
| மலேசியா | - +60 10 766 4123 |
| | - +016-710 4123 |
| நியூசிலாந்து | - +64 953 74 133 |
| சிங்கப்பூர் | - +65 819 25 231 |

**அமெரிக்காவில்**

| | |
|---|---|
| கலிபோர்னியா | - +1408 329 6899 |
| மேரிலேண்டு | - +1240 481 5268 |

**இலங்கையில்**

| | |
|---|---|
| கொழும்பு | - (+94)0112 930152 |
| திருகோணமலை | - (+94)071 0690 909 |
| | (+94)026 222 1880 |

**ஆசீர்வாதமான சென்னை**

| | |
|---|---|
| மவுண்ட் ரோடு | - 044-450 16 562 |
| | - 96777 32515 |

**ஆசீர்வாதமான கர்நாடகா**

| | |
|---|---|
| வீரண்ணபாளைய | - 78990 88538 |

**ஜெப மலை**

83 00 131 000, 04634-240 245

'இயேசு விடுவிக்கிறார்'

# புதிய வெளியீடுகள்!

**2026ம் ஆண்டிற்கான வாக்குத்தத்தங்கள் அடங்கிய BIBLE LAND காலண்டர் மற்றும் டைரி!**






| காலண்டர் ஒன்றுக்கு | | டைரி ஒன்றுக்கு |
|---|---|---|
| ₹ 30/-. | நேரில் பெற | ₹ 250/-. |
| ₹ 60/-. | இந்தியா முழுவதிலும் இருந்து தபாலில் பெற | ₹ 300/-. |

For More Details: 83000 11234.

Online shopping: *India:* jrbibleworld.in
*Foreign:* jrbibleworld.com

## கோயம்புத்தூரில்

'இயேசு விடுவிக்கிறார்' மற்றும்
COMFORT திருச்சபை இணைந்து நடத்தும்,

# அற்புதப் பெருவிழா!

2026 ஜனவரி 24,25
(சனி, ஞாயிறு)

நேரம்: மாலை 6:00 மணிக்கு.

இடம்: கோவை வித்யா மந்திர் பள்ளி அருகிலுள்ள மைதானம், அவினாசி ரோடு, தொட்டிப்பாளையம் ரோடு பிரிவு, சின்னியம்பாளையம், கோயம்புத்தூர்.



தேவ செய்தியும், ஜெபமும்:

**சகோ. மோகன் சி. லாசரஸ்**

பாவப் போராட்டமா?
வியாதியின் வேதனையா?
பிசாசின் கட்டுகளா? கவலையா?
கண்ணீரா? கடன் பிரச்சனையா?

*அன்புடன் அழைக்கிறோம்! வாருங்கள்!*

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!

தொடர்புக்கு: **World Revival Prayer Center,**
90, Arts College Road, Carmel Building-2nd Floor,
Near Visalakshi Ladies Hostel, Coimbatore – 641 018.
Ph: 92444 44428, 0422 - 2309040, 89034 05315.

Registered with Registered News Paper of India No: 42579/83.
Postal Registration No: TTN/145/2024-2026
Overseas Registration No: TTN/241/2024-2026
Licensed to Post Without Prepayment No: TN/WPP-33/SR/2024-2026
Date of Publication: 25-12-2025.
Date of Posting: 27th to 30th of every month.
Office of Posting: BPC, Tuticorin HO - 628 001.


பொங்கல் விடுமுறை நாட்களில்,

நாலுமாவடி - தேவனுடைய கூடாரத்தில்

'இயேசு விடுவிக்கிறார்'

# தீர்க்கதரிசன ஜெப முகாம்!

(3 நாட்கள் உபவாச ஜெபம்)

2026 ஜனவரி

14, 15, 16.

(புதன்) (வியாழன்) (வெள்ளி)



**தேவன் பயன்படுத்தும் பாத்திரங்கள்:**

சகோ. மோகன் சி. லாசரஸ்,
சகோ. வின்சென்ட் செல்வக்குமார்,
சகோ. சாம் ஜெபராஜ்.

முன் பதிவு செய்ய:
partner.jesusredeems.com

**கவனிக்க வேண்டிய காரியங்கள்:**

- முன் பதிவு அவசியம்.
- 9 வயதிற்குட்பட்ட சிறு பிள்ளைகள் கட்டாயமாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- வியாதியஸ்தர்களுக்காக, பிசாசின் போராட்டம் மற்றும் தனிப்பட்ட காரியங்களுக்காக ஜெபிக்கப்பட மாட்டாது.
- 9 வயதுமுதல், 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு தனியாக ஜெபம் நடைபெறும். இதற்கு பதிவு அவசியம்.
- இந்த ஜெப முகாமின் ஒரே நோக்கம் தேசத்திற்காக ஜெபிப்பதுதான்.
- இரட்சிப்பின் நிச்சயம் உள்ளவர்கள், 3 நாட்களும் உபவாசித்து ஜெபிக்க முடிகிறவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- இந்த ஜெப முகாமின் பதிவுக் கட்டணம் ₹ 100/- மட்டுமே.
- ஆண்கள், பெண்கள் தங்குவதற்கென்று தனித் தனியாக இட வசதிகள் உண்டு.

விபரங்களுக்கு: தீர்க்கதரிசன உபவாச ஜெப முகாம், இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி-628211, தூத்துக்குடி மாவட்டம்.
Email: revival@jesusredeems.org அல்லது போன்: 04639-35 33 33, 70947 77783.


**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி - 628 211,
தூத்துக்குடி மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.

எமது முகவரி:
Office: (+91) 04639-35 33 33
Email: prayer@jesusredeems.org
Vist: www.jesusredeems.com

உங்கள் அவசர ஜெப
அழைப்பிற்கு 24 மணி நேரமும்
(+91) 04639-35 35 35 (அல்லது) 22 00 00
என்ற இந்த எண்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களது அவசர ஜெபக் குறிப்புகளை 24 மணி நேரமும் Whatsapp மூலமாக தெரியப்படுத்த,
+ 91 94 88 17 53 15.
(இந்த எண்ணை ஜெபக் குறிப்புகளை அனுப்ப மட்டுமே பயன்படுத்தவும்.)

Our Website

Owned and Published by Bro. Mohan C. Lazarus, Printed by Sis. Joyce Lazarus at Nalumavadi - 13/81, Lakshmipuram, Angel Press and released through Nalumavadi-Jesus Redeems. Editor: Bro. Mohan C. Lazarus